
# பாலம்

பெப்ரவரி 1998




திரையரங்குகளில் சாதனைபடைக்கும்
"டைற்றானிக்" திரைப்படம்


TITANIC



டாக்டர். இந்திரகுமாருடன்
ஒரு சந்திப்பு



பிரதான அச்சைத்
தகர்த்தெறிந்த
கிளிநொச்சித் தாக்குதல்



சந்திரப் புகைப்படங்கள்
உண்மையானவையா?

# டூட்டிங்கில் தரமிகு நவீன ஜவுளி மாளிகை

உங்கள் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய ஒரே இடம்.

# RANI FASHION DESIGN & TAILORING

**SAREE BLOUSES, SALWAR KAMEEZ, PARTY FROCKS, MATENITY DRESSES, ALTERATIONS & EMBROIDERY, WEDDING CARDS**

சிறந்ததரம் குறைந்தவிலை

மறவாதீர்கள்

RANI FASHION DESIGN & TAILORING.







எம்மிடம் புடவைகள் வாங்கும்
ஒவ்வொருவருக்கும் ஒரு சாரி பிளவுஸ்
இலவசமாக தைத்துக் கொடுக்கப்படும்

பட்டு சாறிகள், பிளவுஸ் துணி வகைகள்
கூறை சேலைகள், ஷல்வார் கமிஸ் வகைகள்,
குழந்தைகளுக்கான ரெடிமேற் ஆடைகள்


**உங்கள் விருப்பத்திற் கேற்ப அழகிய டிசைன்களில் சாறிபிளவ்ஸ் தைப்பதற்கு ஞாபகத்தில் இருக்க வேண்டிய ஒரே இடம்.**

**உங்கள் அவசர தேவைகட்கு**
**24 மணிநேர ஒடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.**

33, UPPER TOOTING ROAD,
LONDON SW17.

**Tel:- 0181- 648 2788   0181- 767 7627**


# உள்ளே....



கிளிநொச்சித் தாக்குதல்
பக்கம் - 4



இந்தியத் தேர்தல்
பக்கம் - 6



சந்திரனில் மனிதன்?
பக்கம் - 24



பக்கம் - 26
குன்ரர் கிராஸ்



கேட்டோம் சொன்னார்கள்
பக்கம் - 28



டைற்றானிக்
பக்கம் - 42




பக்கம் - 48
நாடும் மக்களும்


தாமரை இலை பறித்து
பூவரசு விறகெடுத்து
எங்கள் கோயிலில்
உரிமையுடன் பொங்கலிட
நாளொன்று தந்திடுவாய்
நாட்காட்டியே

PAALAM
Tamil Monthly Magazine
SE - nr. 20 20 05 45
பெப்ரவரி 1998
பாலம்
சமூக-அரசியல்-கலை-
இலக்கிய மாத சஞ்சிகை

முகவரி:
Sonder Parken 10.st.tv
7430 Ikast
Denmark.
Fax: + 45 97 25 22 96

ஒரு ஆண்டுக்கான சந்தா

| | |
|---|---|
| பிரான்ஸ் | - 180 FFr |
| சுவிஸ் | - 48 Sfr |
| ஜேர்மனி | - 50 Dm |
| டென்மார்க் | - 200 Dkr |
| நோர்வே | - 200 Nkr |
| இங்கிலாந்து | - 20 £ |
| கனடா | - 45 C$ |
| அவுஸ்ரேலியா | - 45 AS |

ஏனைய நாடுகள் - 20 £

Paalam Publications
A/C No: 3406889468
DEN DANSKE BANK
Østergade 1
7430 Ikast
DENMARK

# உறுதியுடன் முயற்சிப்போம்

புலம் பெயர்ந்தோரிடையே சில பணிகள் ஏற்கனவே எட்டப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அவற்றில் பல நிறைவேற்றப் படாமலே தாமதமாகி வருகின்றன. அவற்றில் ஒன்று சிறு சஞ்சிகைச் சூழலில் இருந்து விடுபட்ட; பரவலான தேவைகளை நிறைவேற்றக் கூடியதோர் சஞ்சிகையின் உருவாக்கம். இன்றைய தமிழ்ப் படைப் பிலக்கியச் சூழல் பயணம் பண்ணியிருக்கும் தொலைவுகளையும்; கோணங்களையும் அறிந்தோர், அப்படியானதோர் பணி சாத்திய மானதுதானா என்று தயங்க இடமிருக்கலாம். எனினும் கேள்விகளும் அதற்கு நாமே வழங்கும் பதில்களுமே தீர்வுகளாகிவிடுவதில்லை. முயன்று பார்க்காது முடிவு கூறுவதைவிட உறுதியுடன் முயற்சிக்கிறது பாலம்.

பல படைப்பாளிகளுடன் தொடர்பு கொண்டபோது, சகல புலம் பெயர் நாடுகளுக்கும் பரவலாக்கப்பட்ட; புதிதாக வாசிக்கப்படவும் மக்களிடையே நம்பிக்கையின் அச்சாணியாகச் செயற்படவும் வேண்டிய சஞ்சிகையின் பணியொன்றிற்கு யாருமே எதிர்வினை காட்டிய தாயில்லை. தேவையொன்று காத்துக் கிடப்பதை அனைவருமே ஒப்புக் கொள்கிறார்கள். எஞ்சியிருப்பது எப்போதும்போல செயற்பாடு மட்டுமே. அந்தச் செயற்பாடு இப்போது அடுத்த மலராக உங்கள் கைகளில்.

'நாஷனல்' அணிந்து, பேனாவும் கையுமாகக் காட்சிதரும் ஆசிரியரும், வறுமையால் மெலிந்த தமிழ்ப் படைப்பிலக்கியச் சூழலில் களைத்துத் தள்ளாடியபடி மீண்டும் ஓர் சஞ்சிகை அவசியமற்றது. இவற்றிலிருந்து முற்றாக வேறுபட்ட, புரியதோர் புள்ளியிலிருந்து பலர் இணைந்து பங்காற்றும் வலையாகத்தான் தொழில் நுட்பத்துடனான சூழலோடு பாலம் உங்கள் முன் வருகிறது. ஆர்வமுள்ள வாசகர், நாளும் நாளும் புதிதாகச் சிந்திக்கும் படைப்பாளிகள், விற்பனைச் சுழற்சி, சமூக அங்கீகாரம் போன்றவைகளில் ஐரோப்பியச் சஞ்சிகைகள் பெற்றுள்ள வெற்றிநிலையை நாமும் இணைத்துக் கொள்ள முயல்கிறோம்.

அருகிவரும் வாசிப்பு நிலையைக் கவனத்தில் கொள்ளல், எதிர்காலம் பற்றிய அச்சமும் பதட்டமும் நிறைந்த புலம் பெயர் வாழ்வில் சில புதிய விளக்குகளைப் பூட்டுதல், புதிய தமிழர்கள், புதிய சூழல், புதிய விமர்சனம், புதிதாக ஓர் சஞ்சிகை இவைகள் நம்மிடம் உள்ளனவா? உள்ளே வரும் ஆக்கங்கள் உங்களுக்கு நம்பிக் கையூட்டும். இவையெல்லாவற்றோடும் மேலும் ஒன்று இலவசமாக எழுதுவதும்; இலவசமாக வாசிப்பதுமான புலம்பெயர் சூழலை முதலில் மாற்றியாக வேண்டும். பணம் கொடுத்துப் படியுங்கள் நாம் படைப்பையும், படைப்பாளியையும் மதிக்க ஆசைப்படுகிறோம்.

பாலம்
செயற்பாட்டு வலையாக்கம்

**உழைப்பவனே பொருள் உலகைப் படைக்கின்றான், மனித வாழ்க்கையின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்கின்றான்.**


*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்*

அரசியல் கட்டுரை

# எதிர் விசைகளால் திகைக்கும் சிறீலங்கா அரசு

சிறீலங்கா அரசு தனது சுதந்திரத்தின் ஐம்பதாண்டுப் பொன் விழாவையும்; அதை நடாத்தி முடிக்க தான் பட்ட அவலத்தையும் இளவரசர் சாள்சை வரவழைத்து நேரடியாகவே காண்பித்திருக்கிறது. திசைமாறிப்போயிருக்கும் சுதந்திரம் பற்றி விருந்தாளியாக வந்திருக்கும் இளவரசர் சுட்டிக் காட்டுவது பொருத்தமல்ல. எனினும் யாழ். நூல் நிலையத்தை சீர்திருத்த வேண்டி அவர் வழங்கிச் சென்றிருக்கும் சில மில்லியன் பவுண்ஸ்கள் அவர் எதைக் கூற விரும்பியிருக்கிறார் என்பதை விளக்குவதற்குப் போதுமானது.

சந்திரிகா அரசு உலக நாடுகளிடையே ஒன்று பேசுகிறது. உள்நாட்டிலோ இன்னொன்றைச் செய்கிறது. இப்படிப்பட்ட ஆட்சிகள் உலகில் முன்னரும் இருந்திருக்கின்றன; இருக்கின்றன. இப்படியாக எவர் எத்தகைய ஒழிப்பு மறைப்பைக் கையாண்டாலும் அவையெல்லாவற்றிற்கும் அப்பால் ஒழிக்கவும் மறைக்கவும் முடியாத விடயங்கள் சில உண்டு. நீர் நிரம்பியுள்ள தொட்டிக்குள் ஓர் பொருளைப் போட்டால் உள்ளே போடப்பட்ட பொருளினதும், வெளியே கொட்டிய நீரினதும் கனவளவு சமமானதாகவே இருக்கும். இதுபோலவே பந்தை எவ்வளவு வேகமாக சுவரில் அடிக்கிறோமோ அதேயளவு வேகத்திலேயே திரும்பிவரக் காணலாம். இவை யாராலும் மறைக்க முடியாத பௌதிக விதிகள். விடுதலைப்புலிகளின் கிளிநொச்சிமீதான



கிளிநொச்சித் தாக்குதல் தரும் பாடம்

சந்திரிகா அரசு உலக நாடுகளிடையே ஒன்று பேசுகிறது. உள்நாட்டிலோ இன்னொன்றைச் செய்கிறது.

தாக்குதல் சிறிலங்கா அரசின் எத்கைய விசைகளுக்கு எதிரானது என்பதை தகவல்கள் மறுக்கப்பட்ட சூழலில் வாழ்வோர் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் இத்தகைய பௌதிக விதிகளை எடுகோளாகக் கொள்வது வசதியானது.

பொன்விழா எழுச்சியோடு வன்னிப் பெருநிலத்தில் நிலைபெற்றிருக்கும் விடுதலைப்புலிகளையும், மக்களையும் நெரித்துவிட அது ஆசை கொண்டிருந்தது. ஏற்கனவே சூரியக்கதிரில் கானல் நீராகிப் போயிருந்த இந்த ஆசையை நிறைவேற்ற இப்போது வேறொரு வடிவம் கொடுத்திருந்தது. இம்முறை அதன் திட்டவரைவு ஓர் கத்தரிக்கோலைப் போல இருந்தது. அதன் கூரிய வெட்டுவாய் வன்னிப் பெருநிலத்தை நோக்கி அகண்டிருந்தது. அதை இறக்குவதற்கான கைபிடிகளில் ஒன்று கொழும்பிலும், மற்றது யாழ்ப்பாணத்திலுமாக வைக்கப்பட்டிருந்தது.

முதலாவது விசையாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உள்ளுராட்சித் தேர்தலைக் குறிப்பிடலாம். இதன் மூலம் குடாநாட்டில் ஜனநாயகம் திரும்பிவிட்டது போன்ற மாயையை ஏற்படுத்தி கண்களில் மண்ணைத் தூவியபடியே தனது ஆசையை எட்ட எண்ணி ஓர்விசை கொடுத்தது. மறுபுறம் கண்டியில் நடைபெற்ற குண்டு வெடிப்பைக் காரணம் காட்டி விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடைசெய்து. அவர்களைப் பயங்கரவாத அமைப்பாகக் காட்டுவதன் மூலம் தனது போரை நியாயப்படுத்த முயன்றது. இது கொழும்பிலிருந்து செயற்பட்ட அடுத்த விசை. இந்த இருவிசைகளின் துணையோடு கூடவே இளவரசர் சாள்சையும் வரவழைத்து தனது பொன்விழாக் கொடிகளை உயரப் பறக்கவிட்டபடியே வன்னிப் பெருநிலத்தை நெரிக்கமுயன்றது.

ஜெயசிக்குறு தடைப்பட்டமையால் இந்தக் காரியத்தின் பிரதான அச்சாக கிளிநொச்சியைத் தெரிவு செய்து கொண்டது. இந்த நிலையில் கத்தரிக்கோலின் இருவாள் முனைகளிலிருந்தும் தப்பிக் கொள்ள வேண்டுமானால் பிரதான இரிசாக இருக்கும் கிளிநொச்சி மீது தாக்குதல் தொடுத்தாலே சிறிலங்கா அரசு உருவாக்கிக் கொண்டுள்ள விசைகளுக்குச் சமமான எதிர்விசையைக் கொடுக்கமுடியும். விடுதலைப்புலிகளும் இதையே தெரிவு செய்தார்கள். இதன்மூலம் கத்தரிக்கோலின் பிரதான அச்சு உடைந்துபோக சந்திரிகா அரசு கனவுகண்ட ஆசை மறுபடியும் கானல் நீராகிப் போய்விட்டது.

**யுத்தம் ஓர் தீர்வல்ல என்பதை சிறீலங்கா அரசும் விளங்கியிருந்தால் அவர்கள் மேலும் போரைத் தொடங்கவேண்டிய அவசியமில்லை.**

இதை விளங்குவோர் சிறீலங்கா அரசு நியாயமானதோர் தீர்விற்குத் தயாரில்லையென்பதையும் இலகுவாக விளங்குவர். அவர்களின் பேரினவாத மனோநிலை மிகப்பழையது. புதிய உலகின் "டிப்போளமற்றிக்" சார் அரசியலுக்கு வெகு தொலைவில் அது தன்னை நிறுத்திக் கொண்டுள்ளது. வளைகுடாவிலிருந்து மூன்றாம் உலக யுத்தமொன்று உருவெடுப்பதற்கான நெருக்கடியை கொபி அனான் தலைமையிலான ஐ.நாவின் குழு புதியதோர் புள்ளியில் வைத்து வெகு இலாவகமாகத் தட்டி வீழ்த்தியிருக்கிறது. இனி ஈராக்கில் நடைபெறவுள்ள ஆயுதப் பரிசோதனைக்கான ஐ.நாவின் குழுவிற்கு தலைவராக சிறிலங்காவைச் சேர்ந்த ஜயந்த தனபாலவே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். புதிய உலகில் இவைகளே வழிகள் என்பது சிறிலங்கா போன்ற பேரினவாத மனோநிலை உள்ளோருக்கு கசப்பானதுதான். இப்போதுள்ள அரசியல் அலைகளால் நாடுகளின் அதிகார பீடங்களின் இருத்தலை தீர்மானிக்கும் சக்தியை பாரிய வல்லரசுகள் மெல்ல இழந்துவருகின்றன. பங்குச் சந்தைகாரரின் கைகளுக்கு அந்த அதிகாரம் எழுதப்படாமலே மாற்றமடைந்து கொண்டிருக்கிறது. ஸ்திரமற்ற அமைதியற்ற போரை நிறுத்த முடியாத அரசுகளை இடித்து விழுத்தும் சக்தியாக பங்குச் சந்தைப் பொருளாதாரம் தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. தென் கிழக்காசியாவில் நடைபெறும் பொருளாதாரச் சரிவுகள் இலங்கைக்கு அருகில்தான் நடைபெறுகின்றன. இவைகளை வெல்ல யுத்தம் ஓர் தீர்வல்ல என்பதை சிறிலங்கா அரசும் விளங்கியிருந்தால் அவர்கள் மேலும் போரைத் தொடங்கவேண்டிய அவசியமில்லை. பங்குச் சந்தை முகவர்கள் அவருக்குப் பக்கத்தில் கொழும்பில்தான் இருக்கிறார்கள். கொழும்பில் இருக்கும் பொருளாதார முகவர்களுக்கு பொன்விழா மேடையிட்டுப் போரை மறைத்தல் முடியாது.

0

## பாரதியும் மகாத்மாவும் சந்திப்பு

இந்திய சுதந்திரத்திற்காக கவிபாடிய பாரதியாரை மகாத்மா காந்தி சந்தித்தது 1919–ல் அப்போது அவர் பாரதியாரைப் பார்த்துக் கேட்ட கேள்வி இவர் யார்? என்பதுதான். பாரதி தன் எழுதுகோலை தேசியப் பாதையிலிருந்து திருப்ப இது ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

# இந்தியாவில் இரண்டாவது கட்ட ஜனநாயகப் பிரவேசம்



இந்தியாவின் 12–வது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் வெளியாகி விட்டன. மொத்த ஆசனங்களின் எண்ணிக்கை 542. ஒரு சில முடிவுகளைத் தவிர மற்றவையனைத்தும் வெளியாகிவிட்டன. கிடைத்த முடிவுகளின்படி ஆட்சிக்கட்டிலை நெருங்கி நிற்பது பாரதிய ஜனதா தலைமையிலான கூட்டணியே. எனினும் 935 மில்லியன் மக்களை ஆட்சி செய்யும் அதிகாரத்தையும், 2000–வது ஆண்டில் பிரவேசிக்கும் பொருளாதாரத்தையும் தீர்மானிக்கும் பொறுப்பை இந்திய மக்கள் எந்தவொரு தனிக் கட்சியினதும் கைகளில் ஒப்படைக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.


கிடைத்த முடிவுகள் பாரதிய ஜனதா அணி 250 ஆசனங்களையும், காங்கிரஸ் அணி 166 இடங்களையும், ஐக்கிய முன்னணி 98 ஆசனங்களையும் பெற்றுள்ளன. உதிரிகளாக இருக்கும் 21 ஆசனங்கள் ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிக்கும் பேரத்தில் முக்கியம் பெற்றுள்ளன. இந்திய ஜனாதிபதி யாரை ஆட்சியமைக்க அழைத்திருக்கிறார் என்பதும் எவரை அழைத்தாலும் அவர்களால் அறுதிப் பெரும்பான்மையை எட்டிப் பார்க்க முடியுமா? என்பதுமே இப்போது கேள்விக்குறியாகியுள்ளது. எனினும் இந்திய ஜனநாயகம் இனி வரும் தேர்தல்களில் தொடர்ந்தும் இத்தகைய அனுபவங்களையே சந்திக்க இருப்பதால் இத்தகைய கூட்டுக்கட்சி அரசியல் முறையை அவர்கள் சந்திக்க வேண்டியது தவிர்க்க முடியாததே.

இந்திய ஜனநாயகம் ஒரு கட்சி ஆட்சிமுறையிலிருந்து விலகி பல கட்சி ஆட்சி முறைமைக்குள் பிரவேசித்துவிட்டது. இது இந்திய அரசியல் கட்சிகளின் அடுத்தகட்ட வளர்ச்சியென்று முன்னாள் இந்தி

**2000–வது ஆண்டில் பிரவேசிக்கும் பொருளாதாரத்தைம் தீர்மானிக்கும் பொறுப்பை இந்திய மக்கள் எந்தவொரு தனிக் கட்சியினதும் கைகளில் ஒப்படைக்கவில்லை**



அதிகூடிய வாக்குகளைப் பெற்ற வை.கோபால்சாமி



யப் பிரதமர் ஐ.கே குஜ்ரால் குறிப்பிட்டதுபோல தனிக்கட்சி ஆட்சி முறைமை மாற்றமடைந்த நிலையையே அவதானிக்க முடிகிறது.

நடந்து முடிந்துவிட்ட தேர்தலில் முக்கியமாகப் பேசப்பட வேண்டிய விடயங்களில் ஒன்று சோனியா காந்தியின் வரவு. இவர் காங்கிரஸ் கட்சிக்கு புதிய உற்சாகத்தை பாய்ச்சி தேர்தலில் பெருவெற்றி பெற்றுத் தருவார் என்று காங்கிரஸ்காரர் நம்பினார்கள். ஆனால் சென்ற தேர்தலுடன் ஒப்பிட்டால் அவரது வரவு ஆறு ஆசனங்களை அதிகப்படியாக பெற்றுக்கொடுத்து, மொத்தம் 140 தொகுதிகளில் காங்கிரசை வெற்றி பெறச் செய்திருக்கிறது. அதே வேளை தமிழகத்தில் இக்கட்சி எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பாரதிய ஜனதாக்கட்சி கடந்த ஆண்டைவிட 10 ஆசனங்களை அதிகமாக வென்று 176 இடங்களைப் பெற்றுள்ளது.

தேர்தல் பெரும் பின்னடைவைச் சந்தித்த கட்சிகளில் முதன்மையானது ஜனதாதளம். முன்னர் 44 ஆசனங்களைப் பெற்றிருந்த இக்கட்சி இம்முறை 38 ஆசனங்களை இழந்து போயிருக்கிறது. அடுத்த பின்னடைவைச் சந்தித்திருப்பது தமிழ் மாநிலக் காங்கிரஸ் இக்கட்சி 17 ஆசனங்களையும், தி.மு.க 11 ஆசனங்களையும் இழந்துபோயிருக்கின்றன.

தமிழகத் தேர்தல் நிலைமையில் கருத்துக் கணிப்பீடுகளைப் பச்சைப் பொய்யாக்கி எதிர்பாராத வகையில் அ.தி.மு.க கூட்டணிக் கட்சியாளர் வெற்றி பெற்றுள்ளனர். வை. கோபால்சாமியின் மறுமலர்ச்சித் தி.மு.க வும், பாட்டாளி மக்கள் கட்சியும் எதிர்வு கூறாத வெற்றியைப் பெற்றிருக்கின்றனர். ஊழல் குற்றச்சாட்டுக்களால் அடிபட்டுப்போகுமென எதிர்பார்க்கப்பட அ.தி.மு.க 17 ஆசனங்களைக் கைப்பற்றி முன்வைத்திருக்கிறது. தமிழகத்தில் ஒரு வேளை கூட்டு முன்னணி ஆட்சி வந்தால் நிதியமைச்சர் பதவிக்காக ப. சிதம்பரத்தையும் தெரிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. நடிகர்களில் ராமராஜனின் வெற்றியும் சரத்குமாரின் தோல்வியும்கூட கவனிக்கப்படவேண்டியதே.



**ஊழல் குற்றச்சாட்டுக்களால் அடிபட்டுப் போகுமென எதிர்பார்க்கப்பட அ.தி.மு.க 17 ஆசனங்களைக் கைப்பற்றி வைத்திருக்கிது.**

அன்னிய முதலீடுகளை உள்வாங்கும் இந்தியாவின் புதிய பொருளாதாரக் கொள்கையின் எதிர்காலம் தொடரும். ஜாதிமதக் கலவரங்கள் மடியில் வைத்திருக்கும் கொள்கைகளைப் பிரயோகித்தாலும் தொல்லை. நடைமுறைப்படுத்தவில்லையென மாற்றனாலும் தொல்லை என்ற நிலையிலிருக்கும் அரசியல் கட்சிகளின் தலையில் மக்கள் கடுமையான பணியை ஒப்படைத்துள்ளார்கள். கூட்டணியைத் திருப்திப்படுத்துவதா? உடனடித்தேவைகளுக்குத் தீர்வு காண்பதா? ஆட்சியைக் காப்பாற்றுவதா? என்னும் மும்முனைப் போராட்டச் சூழலை எதிர்கொள்ளவேண்டிய நிலை இப்போது வாஜ்பாய் தலைமையிலான அணியின் கைகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது. கூட்டுக் கட்சிகளின் உதவியுடன் பாராளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை முற்றாகக் கடக்கும் பணியில், இப்போது பலநாடுகளின் கட்சிகள் தேறிவிட்டன. மேலைத்தேய முதலீடுகளை எதிர் கொள்ளும் இந்திய அரசியல்வாதிகள் அறுதிப் பெரும்பான்மையில்லாமலே ஆட்சியமைக்கும் அரசியலை கற்றுக் கொள்வதைத் தவிர இரண்டாவது கட்ட இந்திய ஜனநாயகத்திற்கு மாற்றுவழி இருப்பதாகத் தெரியவில்லை.

# சுப்பிரீம் கோட் சுறுக்கர் அம்மான்........

## கொழும்பிலிருந்து குமுறுகிறார்




வணக்கம் பிள்ளையள்.

நீண்ட நாளாய் இருந்த சுறுக்கர் அம்மான்ரை கடிதம் பார்க்க உங்களைப் பார்க்க ஆவலாய் இருக்கும் எண்டு நம்புறன். என்னையும் அல்லோ இரண்டு நாள் கொண்டு போய் அடைத்துப் போட்டாங்கள். அட கோதாரி விழுவார்....இரவு 1 மணிக்கு வந்து கதவைத் தட்டிக் கொண்டு போட்டாங்கள். கொண்டுபோறவ ஏனெண்டு அவங்களுக்கும் தெரியாது எனக்கும் தெரியாது. தெரியும்தேனே எல்லாம் பொன்விழா மண்விழாவாய் போன மனக்கு முறல் ஆக்கும். கொழும்பில இப்ப.... பிடிப்பதும் விடுவதும் விடுவதும் பிடிப்பதும் நாளாந்த அரசின் கடமையாகிவிட்டது பிள்ளையள்.

அதுசரி பிள்ளையள் பொன் விழாவுக்கு வந்த முடிக்குரியவர் ஏதாவது ஆறுதல் வார்த்தைகள் சொல்லி, அரசுக்கு நற்சிந்தனை தெரிவிப்பார் எண்டு பார்த்தால்.... எதுவும் நடக்கேல்லை. மனுசன் வடக்குக் கிழக்கை தலை வைச்சும் படுக்கேல்லையாம். இந்த நாறிப்போன குடும்பத்தின்ரை கதையை விடுவம்.

மற்றது பிள்ளையள்... இங்கை தீர்வுப் பொதி கட்டுற வேலையள் தடல்புடலாய் நடக்குது. சந்திரிகா பாட்டி செய்த பொதி சரியில்லையெண்டு ரணில் பாட்டி பொதி கட்டி அனுப்புகிறம். அதுவும் ஜெயசுக்குறுய் மாதிரி கட்டம் கட்டமாய் திட்டம் போட்டு தீர்வுப் பொதி கட்டுகினம். போற போக்கைப்பார்த்தால் கூடிய கெதில புத்த பிக்குகளும் பொதி கட்டுவினம்போல கிடக்கு.

கிளிநொச்சியில வேலற்ற மகன் விளையாட்டைக் காட்டிப் போட்டார். மாமாவுக்கும் சரியான மனக்கவலை. பத்தாததிற்கு கடலுக்குள்ளையும் பிரடியைப் பொத்திச் சாத்திப் போட்டாங்கள் எங்கடை பெடியள். இதால மாமா இப்ப.... கொடுக்குக்கட்டோட நிற்கிறாராம். புது வருஷத்துக்கு இடையில வழி கண்டுபிடிச்சே ஆக வேணுமாம். பாவம் மனுசன்.

வருகிற நாலாம் திகதி யாழ் மேயராக சத்தியப்பிரமாணம் எடுக்கப் போறாவாம் யோகற்றை பத்தினி. இதுக்குள்ள கொ.த.கு கொம்பனியும் இழுபறிப்படுகினம். அடுத்த மாகாணசபை தேர்தல் விழாவுக்கு முதல்ல. மேயராக ஆஜராக வேண்டுமெண்டு விடாப்பிடியாய் நிற்கிற யோகற்றை பத்தினியை. எதுக்கும் போக முதல்ல ஆரேட்டையும் குறிப்பைக்கொண்டு போய் காட்டி வியாழ மாற்றம் எப்படியெண்டு கேட்கச் சொல்லுகினமாம். ஆரு கண்டது...... அவோக்கு பத்தில வியாழனோ பாவத்து வியாழனோ தெரியாது.

அதுசரி பிள்ளையள் கனக்க எழுதுறன் எண்டு குறை நினைக்கமாட்டியள். இந்த தமிழ்ப் பேப்பர்களைப் பார்க்கிறபோது, தீர்வுப்

பொதிகளைப் பற்றியோ..... அல்லது இவள் சந்திரிகா பாட்டியைப் பற்றியோ.... அல்லது மாமனாற்றை இராணுவ சாகசம் பற்றியோ... விமர்சனம் செய்கிறவை நல்லாய்த் தான் விமர்சிக்கினம். இனிமேல் தமிழ்மக்கள்.... அரசு சமாதானத்தைக் கொண்டுவரப்போவதில்லை எண்ட நம்பிக்கையில் இருப்பதாகவும் சொல்லுகினம். இவற்றையும் சொல்லுற விமர்சகர்கள் கொஞ்சம் தள்ளிப் போய்..... இப்படியே போனால் தமிழீழமே பிரச்சினைக்கு உறுதியான தீர்வு எண்டு அடிக்கடி எழுதவேணும் எண்டு நினைக்கிறன். ஏனெண்டால் உண்மையும் அதுதானே பிள்ளையள். இதுல என்ன ஒளிவு மறைவு கிடக்குது. கொ.த.கு. கம்பனியள் தான் பிழைப்புக்காக பொதிசுமக்க விரும்பினம். ஆனா எங்கட மக்கள் அப்படி இல்லைத்தானே! அதோடை இன்னுமொண்டு சொல்ல வேணும்.... சில பேர் பெரும்பான்மை இனம்..... பெரும்பான்மை சமூகத்தவர் எண்டும் தாளிசம் பண்ணுகினம். தமிழர்கள் சிறுபான்மை இனத்தவராம்.... இதென்ன அநியாயம். அட நாங்க தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம், தனித்துவமான தனியரசு அமைச்சு வாழ்ந்த இனம். புடுங்கித் தின்ன வந்த பூனைக்கண் பாட்டியள் செய்த நாசமறுந்த வேலையால பெரும்பான்மை, சிறுபான்மை எண்டு வந்திட்டுது பிள்ளையள். சிறுபான்மை எண்டு சொல்லி தமிழனை சிறுமைப்படுத்துற வேலையாய்க் கிடக்குது. இது ஒரு வாய்வுச் சேட்டை. அது தானாப் போயிடும் எண்டு நம்புறன். உண்மையைத்தான் சொல்லுறன் சுறுக்கர் அம்மானை வித்தியாசமாய் நினைக்கக்கூடாது. தம்பியவை இப்ப சந்திரிகா பாட்டி முகத்தை 'ம்' எண்டு வைச்சிருக்கினம். இலங்கைக்கு வந்த ஜேர்மன் நாட்டு தூதுக்குழு வேலற்றை மகனோட நீங்கள் விலகிச் செல்லாமல் ஒத்துப்போக வேணுமெண்ட மாதிரி கதைச்சுப் போட்டினமாம். வவுனியா வரையும் போன தூதுக் குழு சொல்லிப்போட்டுதாம்.... ஆமியின்ரை அங்காடிகள்தான் அதிகமாகக் கண்டதெண்டு. வெளிநாட்டமைச்சர்.... அவர் தான் எங்கட வேதாளம் விறைச்சுப் போனாராம்.

தடையெண்டு சொல்லி நாங்கள் நடைப்பயணம் செய்தபோது முதல்ல உங்கட நாட்டில தடை செய்யாமல் நாங்கள் எப்படித் தடைசெய்யிறது எண்டு கேட்டவங்கள்..... இப்ப நாங்கள் எங்கடை நாட்டில தடை எண்டு சொன்னபிறகும்..... தூதுக்குழு இப்படிக் கதைச்சது சந்திரிகா பாட்டிக்கு பெருத்த வருத்தமாய்த் தான் இருக்கும்.

என்தான் நடந்தாலும் பிள்ளையள் ஒண்டும் சரிப்பட்டுவராது. எங்கடை ஊருக்கு நாங்கள் போக வேணுமெண்டால். ஒரேயொரு வழிதான் இருக்கு. அந்த வழி தமிழீழம்தான். இதுக்குண்டான சகல உதவிகளையும் எல்லாத் தமிழனும் முன் வந்து செய்ய வேணும். எத்தின நாளைக்கு இப்படி அலையுறது. முருகாவெண்டு தூணோட சாய்ஞ்சு...... நிம்மதியாய் இருக்க..... எவ்வளவு ஆசையாய்க் கிடக்கு. எனக்கே இந்த வயசிலையும் இப்படியெண்டால் வாழவேண்டிய உங்களுக்கு சொந்தமண் சொர்க்கம்தானே. வேறென்ன பிள்ளையள் அடுத்த தபாலில் சந்திப்பம் எனக்கும் உடம்பு நிலை சரியில்லை, ஏதோ ஆண்டவன் சித்தம்.

## புரிகிறதா?

ஐம்பது வருஷங்களுக்கு முன்.....

பருப்பூர் சமஸ்தான ராணியும், கருப்பூர் சமஸ்தான ராணியும் ஒரு விருந்தில் சந்தித்தார்கள்.

பருப்பூர், ராணி சொன்னாள்: என் வாழ் நாளிலேயே எனக்கு எது பெருமை தெரியுமா? என் கணவர் என்னைத் தவிர வேறெந்தப் பெண்களையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை.

கருப்பூர் ராணி சொன்னாள்: என் கணவர் என்னைத் தவிர எல்லாப் பெண்களையுமே ஏறெடுத்துப் பார்த்திருக்கிறார்.

பருப்பூர் ராணி சொன்னாள்: நானும் அவரைத் தவிர யாரையும் மனத்தாலும் நினைத்ததில்லை.

கருப்பூர் ராணி: நானும் அவரைத் தவிர.....

அவள் சொல்லி முடிக்குமுன்னே பருப்பூர் ராணி மூர்ச்சையானாள்!

## அனுபவம்

வாழ்க்கையின் சுகதுக்கங்கள் அநுபவிக்கப்படும் போதே அநுபவமாகத் தோன்றுவதில்லை. ரத்தம் வற்றவற்ற அவற்றை நினைவு கூறும்போது அவை, பயனுள்ள அநுபவங்களாகின்றன. ஆசை உச்சத்தில் நிற்கும் போது, அறிவு மழுங்கி போகிறது; அடி விழுந்து அநுபவம் வந்ததும் அது வேலை செய்யத் தொடங்குகிறது.

காதலுக்கு ஜாதி இல்லை!

உண்மைதான்; ஆனால் நீதி உண்டு.

# தேடலும்

# விவாத



பூப்புனித நீராட்டு விழா தமிழ் கலாச்சார பண்பாட்டு அம்சங்களுள் ஒன்றா? பெண்ணடிமைத்தனத்தை வெளிக்காட்டும் குறியீடுகளில் ஒன்றா? அல்லது இவை எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக அடக்கிய ஒரு விழாவா என்ற சந்தேகம் என் மனதை உறுத்திக் கொண்டிருக்கின்றது. தாய் நாட்டிலும் சரி, புலம்பெயர் நாடுகளிலும் சரி இவ் விழாவை விமரிசையாகக் கொண்டாடும் வழக்கம் பின்பற்றப்படுகிறது. எந்த இக்கட்டான காலகட்டத்திலும் எந்தச் சூழலிலும் தமிழன் தன் வழக்கங்களை விட்டுக் கொடான் என்பதை இவ்விழாக்கள் பறைசாற்றுகின்றன.

ஒரு பெண் பூப்பெய்துவதென்பது இயற்கையின் நியதி. சிறு பிள்ளைப் பருவத்தை அவள் தாண்டிவிட்டாள் என்பதை வெளிக்காட்டும் குறியீடு. பூப்பெய்திய நாள் தொட்டு அவள் உடம்பு ரீதியாய், உளவியல் ரீதியாய் பல மாற்றங்களை அடைகிறாள். எனவே ஒரு பெண்ணின் வாழ்வில் பூப்பெய்தும் நாளானது மிக முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. இதனால் தான் ஒரு தமிழ் பெண் பூப்பெய்தியவுடன் அதற்கென சில சடங்கு சம்பிரதாயங்களை

## தமிழர்களால் நடாத்தப்படும் பூப்புனித நீராட்டு விழா



நாம் காலங்காலமாக செய்து வருகிறோம். ஐயரை அணுகி குறிப்பெழுதி.... நாள் பார்த்து தோய வார்த்து..... நல்ல சத்துள்ள சாப்பாடுகளைக் கொடுத்து குறிப்பிட்ட ஒரு நாளிலே பந்தல் அமைத்து விருந்தினர்களை அழைத்து திருஷ்டி கழித்து உண்டு மகிழ்ந்து விழாவாக கொண்டாடுகின்றோம். இவ் விழாவின் போது நடாத்தப்படும் பல அம்சங்கள் எமது கலாச்சார அம்சங்களை வெளிக்காட்டுவதால் இதை ஒரு கலாச்சார விழாவாக ஏற்றுக்கொள்ளலாம். இவ்விழாவின் உள்நோக்கத்தை எடுத்துப் பார்த்தால், பெண்ணடிமைத்தனத்தின் ஒரு குறியீடாகவும் இது அமைவதைக் காணலாம். கல்யாண சந்தைக்கு ஒரு பெண் தயாராகிவிட்டாள்

# தெளிவும் அரங்கு

இவ்விழாக்கள் நடாத்தப்படுகின்றன. பூப்பெய்திய பெண்ணை ஆசீர்வாதம் செய்து, மனநிறைவுடன் வாழ்த்தும் நோக்கம் அருகி, கொடுக்கும் அன்பளிப்பை இன்னொருநாள் வட்டியுடன் பெறலாம் என்ற எதிர்பார்ப்போ, அல்லது முன்பொரு முறை தாம் பெற்ற அன்பளிப்பைக் கொடுப்பது தமது கடமை என்ற கருத்துடனோ விழாவில் பலர் கலந்து கொள்ளும் ஒரு கேவலமான நிலை உருவாக்கிக் கொண்டு வருகிறது. புனிதமான இந்த விழாவை வியாபாரமாக்கி, அதிலும் பணம் சம்பாதிக்கும் கள்ள நோக்கம் எமது கலாச்சார பண்பாட்டுப் பெயராலே நிறைவேற்றப்படுவதை எண்ணும் போது மிகவும் கவலையாக இருக்கிறது. சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பதற்கான சமூக அங்கீகாரம் பெறும் நோக்கமாக நடாத்தப்படும் விழாவாகவும் இதைக் கொள்ளலாம். தமிழ் பண்பாட்டு கலாச்சார விழுமியங்களை பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு ஒவ்வொரு தமிழ்ப்பெண்ணின் தலைமீதும் சுமத்தப்பட்டுள்ளது. ஒரு பெண் பூப்பெய்தும் அந்த நாளிலிருந்து அவள் சுமைதாங்கியாகிறாள். நால் வகைக் குணங்களை உடையவளாய்.... பொறுமையெனும் நகையணிந்து..... இப்படியே பல நிபந்தனைகள் பெண்களுக்கு விதிக்கப்பட்டு அவர்களுடைய உணர்ச்சிகள், அபிலாஷைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. அதற்கான அடையாள அட்டையைக் கொடுக்கும் நாளாக இப் பூப்புனித நீராட்டு விழாவை எடுத்துக் கொள்ளலாம். அண்மைக்காலங்களில் பூப்புனித நீராட்டு விழாவுக்கான நோக்கம் புது விளக்கத்தைத் தருவதாய் உள்ளது. அதாவது அன்பளிப்பு பெறுவதை நோக்கமாகக்கொண்டே என்ற பெயராலே பெண்ணைப் பந்தலில் இருத்தி உள்ள நகைகள் எல்லாம் பூட்டி, வாங்கிய புதுச் சேலைகளை அணிவித்து, வீடியோ எடுப்பவரும் ஒவ்வொரு கோணத்தில் அப்பெண்ணைப் படம் எடுக்க அனுமதி பெற்றுவந்த விருந்தினர்கள் விருந்துண்டபின் தமது அன்பளிப்பைக் கொடுக்க விழா இனிதே முடிவடையும். கிடைத்த அன்பளிப்புகளை வீட்டில் சென்று எண்ணிய பின் தான் பெற்றோரின் நோக்கம் நிறைவடையும். ஒரு நாள் முழுவதும் கதாநாயகியாக்கப்பட்ட பெண் இனிமேல் தான் எப்படியெல்லாம் அடக்கப்படுவேன் என்பதை அறியாமல் அன்று மிகவும் பூரிப்புடன் காணப்படுகிறாள். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பதை 'திரைகடலோடியும் விழாக்களை நடத்து'..... என மாற்றி அமைக்கலாமோ எனத் தோன்றுகிறது.

எனவே பூப்புனித நீராட்டு விழா என்ற சடங்கு இன்று தடம் மாறி, வேறு பல நோக்கங்களுக்காய் நடாத்தப்படும் ஒரு விழாவாக மறு உருவம் எடுத்துள்ளது. எனினும் வெளிநாட்டவர்கள் எம்மிடம் ஏன் இப்படிப்பட்ட விழாக்களை நடாத்துகிறீர்கள் எனக் கேட்டால் மதரீதியான, கலாச்சார ரீதியான விளக்கங்கள் கொடுப்பதில் மட்டும் நாங்கள் ஒருபோதும் சளைப்பதில்லை. காரணங்கள் எதுவாயிருப்பினும் காரியத்தில் கண்ணாக இருப்பது எம்முடன் ஊறிய ஒரு பண்பாகிவிட்டது. இப்பண்பு இருக்கும் வரைக்கும் நாம் வாழுவோம்?.

– மல்லீஸ்வரி ஆதவன்
டென்மார்க்

**வாசகர்களே!**

தேடலும் தெளிவும் விவாத அரங்கப் பகுதியிலே உங்களின் கருத்துக்களைத் தேடி எடுத்து எழுதுவதுடன் அதற்கான உங்களின் ஒரு தெளிவான முடிவினையும் சுட்டிக்காட்டி பாலம் சஞ்சிகைக்கு எழுதுங்கள்.

## ஞானத் தொழிற்சாலை

ராஜா பர்த்ருஹரி ஓர் நாள் இரவு திடீரென்று விழித்துக் கொண்டுவிட்டார்.

பக்கத்தில் மனைவியைக் காணவில்லை!

அரண்மனை நந்தவனத்தில் வந்து பார்த்தார். அங்கே குதிரைக்காரனோடு அவள் கூடிக் கொண்டிருந்தாள். மறுநாள், ராஜா பாத்ருஹரி சந்நியாசியாகிவிட்டார்.

மனைவியிடம் விடைபெறப்போனார்.

மனைவி சொன்னாள்: "எனக்கு மிக்க மகிழ்ச்சி! ஒரு மகாராஜாவை மகா ஞானியாக்கியது நான் தானே!"

ராஜா பர்த்ருஹரி சொன்னார்: "நீயல்ல, குதிராக்காரன்!"

ராணி அலட்சியமாகப் பார்த்துவிட்டு உள்ளே போவதற்காகத் திரும்பினாள்.

பர்த்ருஹரி சொன்னார்: "நில்! அவனை எப்போது ஞானியாக்கப் போகிறாய்?"

கவியரசு கண்ணதாசன்

# தாலாட்டும் ஒப்பாரியும் தவறிப்போன தலைமுறை

தமிழினத்தின் வாழ்வு பாடல்களுடன் ஆரம்பித்து பாடல்களுடனேயே நிறைவடைவதாகும். இயற்கையோடு கலந்த தமிழரின் கிராமிய வாழ்வு ஓர் அழகிய மாலை போலக் கோர்வைபட்டுள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் அவ்வப் பருவத்திற்குரிய பாடல்களால் வழிநடத்தப்படுகிறது. பிள்ளை பிறந்தவுடன் கேட்கும் தாலாட்டுப் பாடல், பின் பாலர் பாட்டு, ஊஞ்சல்பாட்டு, கோலாட்டம், கரகம், கும்மி, காவடி, வழி பாடு, தொழில், திருமணம் என்று நகர்ந்து ஒப்பாரியில் முடிவடைகிறது. இன்றைய தமிழரின் புலம் பெயர் வாழ்வில் இக்கிராமியப் பாடல்கள் ஏறத்தாழ தொலைந்து போய்விட்டன என்றே கூறலாம். தாலாட்டில்லாத பிறப்பும், ஒப்பாரியில்லாத இறப்புமாகிவிட்ட புலம்பெயர் வாழ்வில் தாலாட்டுப் பாடல்கள் புது வடிவம் பெற வேண்டியது அவசியம்.



ஐரோப்பியச் சூழலில் பிறக்கும் குழந்தைகளுக்கு தாலாட்டுக் கேட்கும் பாக்கியமும், அன்னை அருகில் இருந்து சீராட்டும் பாக்கியமும் வெகுவாகக் குறைந்து வருகிறது. பாட்டன் பாட்டி அருகிலிருந்து உரைக்கும் உபகதைச் செல்வங்கள்கூட வெகு தொலைவில் போய்விட்டன. "ஆராரிரோ ஆரிவரோ" என்று ஆரம்பிக்கும் தாலாட்டுப் பாடல்களின் ஆரம்ப வரியே பிறந்திருக்கும் குழந்தை யார்? என்று வினவும் நமது மூதாதையரில் யார் இவர்? என அடுத்த வினா வரும். இப்படியாக குடும்ப பாரம்பரிய உறவுகளோடு அக்குழந்தையைத் தொடுத்து வாழ்வை முன்னெடுப்பன தாலாட்டுப் பாடல்கள். 'தால்' என்றால் நாக்கு என்பது பொருள். தாலாட்டில் தமிழையும், தாய்ப்பாலில் வீரத்தையும் பெற்று வளர்ந்த மரபு தமிழ் மரபு.

குழந்தை தொட்டிலில் கிடக்கும் பருவம், கால்களுக்கு உறுதியளிக்கும் பாடல்கள், பேசத்தொடங்கும் பருவத்துப் பாடல்களென பல படிகளில் இப்பாடல்கள் விரிவ

டையும். தமிழர் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் தவிர்க்க முடியாதவையாகும். இனி தாலாட்டுப் பாடல்கள் எப்படி ஆரம்பிக்கின்ற தென்பதைப் பார்க்கலாம்.

மாடுகட்டி நைந்துபோன பழங் கயிற்றில், தான் கட்டி நைந்து போன பழைய சேலையில் தொட்டில் கட்டிப் போடுவாள் தாய். ஏன்? வறுமை இல்லாவிட்டாலும் வழமை அது. நைந்த கயிற்றில் தும்பு உதிர்ந்து குழந்தைக்குப் சொரியாது. பழைய சேலை மென்மையாக இருக்கும். தாலாட்டு மட்டும், தூக்கியடிக்கும், ம்...தன் பிள்ளை அரசாளப்போவதாகவும், அவன் அப்பா, மாமன்மார் எல்லோரும் பெரிய வீரர்கள் என்றும் பாடுவாள்.

"தொட்டிலுமோ பொன்னாலே....
தொடுகயிறோ முத்தாலே....
மாமன்மார் வாசலிலே தம்பிக்கு
மருக்கொழுந்து பூப்பூக்கும்
கொத்தமல்லி பூப்பூக்கும்
கொடிமிளகு காய்காய்க்கும்
மைந்தன் விளையாட மாமா
மான் வேட்டை ஆடி வாறார்
பிள்ளை விளையாட மாமன்
புள்ளிமான் கொண்டு வாறார்

அல்லி அரசாண்டா அர்ச்சுனனாம் உன் மாமன்,. இப்படித் தாலாட்டுக்கள் பாடிவளரும் பிள்ளை, உட்காரும் பருவம்.

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு...
சாயக்கிளியே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு
கோயில் புறாவே சாய்ந்தாடு.

ஓசையை கிரகித்து அதற்கேற்ப அசையப் பயிற்சி நடக்கிறது.

"கைவீசம்மா கைவீசு..
கடைக்குப் போகலாம் கைவீசு."

அடுத்து தலை..

"தலையாட்டி வந்தான் தலை யாட்டி
காசு குடுங்கோ...
கடனுக்கு ரெண்டு சல்லி கொடுங்கோ"

இனிக் குழந்தை எழுந்து நின்று நடக்கப் பழகுதல், கால்களுக்கான பயிற்சி.

"கூத்து கூத்து குமரப்பா..
குரக்கன் கொட்டிக் கொண்டு உமலத்தா."

ஒரே வகையான சத்தங்கள் குழந்தையின் மனப்பயிற்சியும் தொடங்கப்பட்டு விடும். பேசத் தொடங்குமுன் பாடல்....

"நிலா நிலா...வா...வா"
"காக்கா...காக்கா..." போன்ற

இலகுவான குழந்தையைக் கவரும் பொருட்கள் பற்றிய மொழி வழக்குப் பாடல், இப்போது மூன்று வயது, மூளைக்கு வேலை. கேள்வி கேட்கப் பழகுதல்.

நிலா...நிலா...எங்கே போறாய்?
காட்டப் போறன்.
காட்ட ஏன்?
கேட்டி வெட்ட.
கேட்டி ஏன்?
மாடு சாய்க்க.
மாடு ஏன்?
சாணி போட.
சாணி ஏன்?
வீடு மொழுக.
வீடு ஏன்?
பிள்ளை வளர....

என்னம்மா மரத்தினிலே
என் மகனே கரிக்குருவி
என்னகரி ஓட்டுக்கரி
என்னோடு நண்டோடு
என்னநண்டு பால்நண்டு
என்னபால் ஆட்டுப்பால்
என்னாடு பொன்னாடு
என்ன பொன் காக்காப்பொன்
என்ன காக்கை அண்டங் காக்கை
என்ன அண்டம் பனை அண்டம்
என்ன பனை முடப்பனை
என்ன முடம் கால்முடம்
என்னகால் மரக்கால்
என்ன மரம் மாமரம்
என்ன மா என்னம்மா

மரத்தினிலே... இனி கேட்டவர் பதில் சொல்ல பதில் சொல்பவர் கேட்பவராக மாறுவார். இதே போன்று சொற்பயிற்சிக்கான சிறுவர் சத்தங்கள் உணவுப் பண்டங் களையொட்டி வரும். இவை உணவில் விருப்பத்தை ஏற்படுத்தி பிள்ளைகளின் ஆரோக்கியத்தை பாது காப்பன.

குழந்தை தொட்டிலில் கிடக்கும் பருவம், உட்காரும் பருவம், நடக்கும் பருவம், கால்களுக்கு உறுதியளிக்கும் பாடல்களென பல படிகளில் இப்பாடல்கள் விரிவடையும். தமிழர் உலகின் எப் பாகத்தில் வாழ்ந்தாலும் தவிர்க்க முடியாதவையாகும். புலம் பெயர் மக்களிடையே புதுவடிவம் பெறவேண்டியவை தாலாட்டுப் பாடல்களே.

**தமிழ்க்கவி**

உலக நாடுகள் அனைத்தும் புதுப்புது ஆயுதங்களைக் கண்டுபிடிக்கப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும், இந்த நேரத்தில் அமெரிக்கா டொல்பின் மீன்களைக் கொண்ட தற்கொலைப் படை ஒன்றை அமைத்துள்ளது. அமெரிக்கா புளோரிடா மாநிலத்தில் டொல்பின்களுக்குப் பயிற்சி கொடுக்கும் முகாம் உள்ளது. எதிர் கப்பல்களில் வேவு கருவிகளைப் பொருத்துவதற்கும், கப்பல்களை குண்டு வீசித் தாக்கவும் டொல்பின் மீன்களைப் பழக்குகின்றார்கள். டொல்பின்களின் தலையில் அபாயகரமான குண்டைக் கட்டி எதிரியின் கப்பல்களுக்கு அருகில் செல்ல விடுகின்றனர். உடனே தலையில் உள்ள குண்டு வெடித்து கப்பல்களைத் தகர்க்கும். கப்பலுடன் சேர்ந்து டொல்பின்களும் இறந்துவிடும். இப்படி டொல்பின் மீன்களைக் கொல்லுவதற்கு அமெரிக்காவில் பெருமளவில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

# எங்குதான் செல்வாய் இனி....!?

கோழியின் செட்டைக் குஞ்சாய் வாழ்ந்திட்ட காலம் போய்...!
தொட்டால் நெருப்பாய், சூழ்ந்தால் வேங்கையாய்
சுடர்விடும் தமிழா...! தூக்கடா குண்டிடனை....!
சுழன்றடி, சுழன்றடி, எதிரியை.. தமிழா...!
எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

குந்தியிருந்தது சொந்த மண் அங்கே
கொடியவன் படை குவிந்தது...!
கோழிக்குள் குஞ்சாய் வாழ்ந்திட்ட நாமும்
குடியைப் பெயர்த்திட்டோம் வெளிநாட்டில்.
அங்கும் கிடைக்குதா நின்மதியெமக்கு....! தமிழா...!
எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

தமிழ் அன்னையின் கைவிலங்கினை உடைக்க
தாம்படையமைத்து வந்தவர் சிலர்- பதவிக்காய்
தம்படைமாற்றியே...! எதிரிபடை சேர்த்தனர். ஆனால்
அன்னை மொழியை, அவர் தம்மினத்தைக்காக்க
அணிகொண்டேகி படைதிரட்டி....
உயிரைக் குண்டாய் சுமக்கும் தம்பிமார்
உத்தமர் படைவழி செல்லாமல்.... தமிழா...
எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

அழுகிவிட்ட காய், கனிக்கு அரச மரியாதை...
புழுதிகொண்ட நாய்நரிக்கு போர்த்துகிறார் பொன்னாடை....!
ஈயமதை வெள்ளியென்று இதுவரையும் நம்பினோம்...
ஈன்றதாயை விற்கும் மகன் இன்று நாமும் காண்கிறோம்.
தாயின்மானம் காக்கபிள்ளை தமிழைக்காக்கும் வேலியா...!?
இத்தனையும் கண்டு நீயும் மௌனியாகி நிற்பதோ...!?
எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

முறைகெட்ட செயலுக்கு முடிவுகேட்பேன்...!
குறைகண்டால் கொதித்தெழுவேன்....!
கொடுமைக்கு துணைபோகேன் என்ற பொலிஸ்
யு.எஸ்.ஏ என்கின்ற உலகப் பொலிஸ்... தமிழரிடம்
பறித்திட்ட அவர் உரிமைதனை எதிரியிடம்
பறிப்பதற்கே போராடும் எம் தமிழர் படையை
இனம்காணாத்தான் மறுத்து....! நரிக்குணத்தில்
பழிசெய்வோர் பட்டியலில் சேர்த்திட்ட செய்தி கண்டு...
திரைகிழித்து பணிமுடித்து....! தமிழா...!
எம் மண்மீள்படை களங்கமது போக்காது....!

எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

பனிபடரும் வீதியெல்லாம்...
பக்தர்களோ...! உருளும் பக்தி நிலை வளர பக்தர்
பாலோடு மிளகு தின்று தம் பக்திதனை எடுத்துரைக்க
ஆலயங்கள் தம்பணியை ஆர்வமுடன் செய்திருக்க
மாற்றுமதம் வந்து, வாசல்மணி அடித்தவுடன்
காற்றதுபோல் பறந்து காரேறித்தான் செல்லும் இந்துவே...!
நம்பிக்கை ஒன்றே....! அருள்தரும் தும்பிக்கை என்றெண்ண
எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

தாம் பட்ட கடன் முடிப்பானென நம்பி
தாம் பெற்ற பிள்ளை தன்னையுந்தான் பெற்றவர்கள்
காணிவிற்று பாசமதையூட்டி அனுப்பி வைத்தார்...!
தாம் கண்காணா தேசமொன்று சேர...!
பெற்றமகன் தானுமதை மறந்துவிட....!
பெற்றவரும் பட்ட கடன் தொல்லையிலே
மேலூர்தான் போனாராம்...! ஆனால்
பெற்றபிள்ளை தானுமவன் கீழூர்தான் வாழ்ந்தாலும்
கருவூரின் கடன் முடிக்க
எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

பிறந்த மண் பாசம் நுகர்ந்திடா பிரிந்து
பறந்தோம் நாம். நம் பரம்பரை கொண்டு...!
வாழ்ந்திடும் மண்ணிலும் பாசம் நுகர்ந்திடும்
வழியதை தடுக்கிறோம் நம் தமிழ் நடைமுறைகொண்டு..!
நாளை நம்பரம்பரை நடுக்கடல் தனிலா...!?
நாடி நீ பணிதொடும் நம் பரம்பரை வாழ்ந்திட...
எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

தாய்நாட்டு மண் கடந்தோம்
தரணியிலே அகதியாக...!
அகிலத்து பெரும் நாடெல்லாம்
அலைந்திட்டோம் கடந்திட்டோம் சுகம்தேடி
கிடைத்ததா சுகம் இங்கே...!? எம்
சுதந்திரத் தாய் மண்ணில்
சுவாசித்த காற்றுத்தானும்.
எங்குதான் செல்வாய் இனி....!
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

வேலணையூர் பொன்னண்ணா

*With Best Compliments from*

# THE PRINT

# வாசன் அச்சகம்

## 0181 - 646 2885

சகல அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் நாடவேண்டிய இடம்

*Specialist in Magazines, Colour Leaflets, Calenders etc..*

பாரிஸில் உங்களிற்கு வேண்டிய அனைத்து மளிகைப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

# மக்கள் கடை

குறைந்த விலை சிறந்த தரம்

அனைத்து உள்ளங்களின் நன்மதிப்பைப் பெற்ற மக்கள் கடை
அது உங்களின் கடை

59,Rue Louis Blanc; 75010 Paris Tel: 01 42 05 99 02

# மாதபலன்

## பெப்ரவரி 1998



இந்த மாதமும்..... தான் கொஞ்சமும் இளைத்ததல்ல என நிரூபிக்குமாப்போல் சராசரி நிகழ்வுகளையும் சாதனைகளையும் சுமந்தபடி மெல்லக் கடந்து சென்றிருக்கின்றது. ஜனவரி மாதத்துக் கண்டிக் குண்டு வெடிப்புடன் சிங்களம் கிலிபிடித்துப் போயிருக்க.... வழமைக்கு மாறான பதட்டத்துடன் இந்த மாதம் பிறந்தது. இதில் இரட்டிப்புக் கலக்கும் சிங்களத்திற்கு, ஒன்று வழமையான விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் மற்றையது பொன்விழாச் சுதந்திரதினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் பிரத்தியேகமாக நடக்கக்கூடும் என்று நம்பப்பட்ட தாக்குதல்கள்.

சுதந்திரப் பொன்விழாவின் ஆர்ப்பாட்டத்திற்குப் பதிலாக நாடி ஒடுங்கி சிங்களம் ஆடிப் போய்க்கிடக்குது.

உப்புச்சப்பின்றி நடந்துமுடிந்த குடாநாட்டுத் தேர்தல் தந்த அதிருப்தி, ஜெயசிக்குறுவின் காலக்கெடுவின் மரணகதி என்பனவும் சிங்களத் தலைமைக்கு பெரும் மனச்சோர்வையும் மன உளைச்சலையும் தந்தமாதம் இது.

எதிர்பார்த்ததுபோல், சிங்களத்தின் சுதந்திரநாளுக்கான செய்திப் பட்டோலையை விடுதலைப்புலிகள் அனுப்பிவைத்தனர். இம்முறை அந்தச் செய்தி கிளிநொச்சியில் இருந்து சென்றது. விடுதலைப்புலிகளின் இந்த சுதந்திர நாள் செய்தியை, பாராளுமன்றத்தில் பாங்காக விரித்துப் படிக்க அமைச்சர் ரத்வத்தை இல்லாமல் போனது சற்று வருத்தமானதே. ஜனவரி 25–ம் திகதி கண்டி தலதா மாளிகைக் குண்டு வெடிப்பின் காரணமாக..... எழுந்த எதிர்ப்பலையை தணிக்க ஒருவார கால இராஜினாமா நாடகத்தை நடத்தும் நோக்குடன் அவர் 28–ம் திகதியே தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக சந்திரிகாவிற்குக் கடிதம் எழுதியிருந்தார். பின்னர் அவரது இராஜினாமாக் கோரிக்கை மறுக்கப்பட்டதும்... தனிமனித உணர்வுகளிலும் நாட்டின் நலனே முக்கியம் எனக்கூறி மீண்டும் அதே கதிரையில் அவர் வந்து ஒட்டிக்கொண்டதும் நல்ல நாடகம் என்பது வேறு. ஆனால் அந்த இடைப்பட்ட தலைமறைவால் யாழ்ப்பாணத்தில் கொடியேற்றிய வெற்றிச் செய்தியை விண்டுரைத்த வீரன் கிளிநொச்சியை பறிகொடுத்த செய்தியை வாசிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

கிளிநொச்சி பரந்தன் படைத்தளத்தொகுதி மீதான தாக்குதலுடன் பெப்ரவரி மாதம் தன் வரவை அட்டகாசமாக அறிவித்தபடி முன்தோன்றியது, சிங்களப் படை ஆக்கிரமித்து நிலைத்து நின்ற பகுதிகள் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலில் அதிர்ந்து அடிசாய்ந்தன. கிளிநொச்சி பரந்தன் மீதான தாக்குதலை 1–ம் திகதி ஆரம்பித்த விடுதலைப்புலிகள், முன்னூறுக்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்பாளர்களை அழித்தொழித்தனர். அவர்களின் இராணுவ வளத்தை அழித்தனர். அவர்களின் போர்வலுவை அழித்தனர். 4–ம் திகதி, பிரித்தானிய இளவரசர் சாள்சின் முன்னிலையில் தனது சுதந்திரப்பொன்விழாவைக் கொண்டாடும் கனவில் திளைத்திருந்த சிங்களத்தலைமைக்கு, அதற்கு முன்னதாக போய்க் கிடைக்கும் வகையில் 3–ம் திகதி, 41 சிங்கள இராணுவத்தினரின் சடலங்களைக் கையளித்தனர்.

தரைப்பாதையைத் தொடுக்க மறுமுனையால் நகரும் படையை எதிர்த்தபடி, இம்முனையில் விடுத

**சாத்திரியார்**

லைப்புலிகள் ஓங்கி அறைந்தனர். சிங்களம் அலறித்துடித்தது, செய்வ தறியாது திணறியது, தன் இஸ்டத் திற்கு ஏதேதோ பிசத்தியது.

இந்த மாதத்தில் விடுதலைப் புலிகள் தங்கள் தாக்குதல் நடவ டிக்கையை எங்கும் விஸ்தரித்து சிங்களத்திற்கு தண்ணிகாட்டினர். ஜெயசிக்குறுவுடன் ஒரு மரபுவழி ப்போரை நடத்திக்கொண்டு, வடக்கிலும் கிழக்கிலும் கெரில் லாப்பாணியிலான தாக்குதலை விஸ்தரித்தனர்.

யாழ். குடாநாட்டில் சுண்ணா கம், சூறாவத்தை, குருநகர், வண் ணார்பண்ணை, பண்டத்தரிப்பு, மிருசுவில் என தமது தாக்குதலை விரித்து சிங்கள ஆக்கிரமிப்பா ளர்களிடத்தே குடாநாட்டில் இழப்பை ஏற்படுத்திக் கொண்டு கிழக்கிலும் தமது கால்களை உறுதி யாகப் பதித்தனர். மட்டக்களப்பு பொலனறுவை எல்லைப்புறமே இம்மாதம் புலிகளின் கண்களில் அதிகம் உறுத்திய பிரதேசம் போலும், அங்கு.... பெரிதும் சிறிது மாக அடிக்கடி தாக்குதல்கள் நடந்தன.

மட்டக்களப்பு வந்தாறுமூலை யில் இராணுவ வாகனத்தொடர் மீது நடத்தப்பட்ட தாக்குதல், இம்மாதம் கிழக்கில் நடந்த தாக்கு தலில் கணிசமான கவனத்தைப் பெறுகின்றது. மதவாச்சி மன்னார் வீதியில் செட்டிக்குளத்திற்கு அருகே சிறீலங்கா இராணுவ வாகனம் தகர்க்கப்பட்டதும், மண லாற்றுத் தாக்குதலும், மண்டூர்த் தாக்குதலும், அம்பாறை சென்றல் காம்ப் பகுதியில் நடந்த தாக்குதல் களும், மட்டக்களப்பு கூச்சங்காட் டுத் தாக்குதலும் சிறீலங்காப்படை யின் பக்க எலும்புகளைப் பதம் பார்த்த தாக்குதல்கள்.

இவற்றை எல்லாம் தூக்கி தூர ஒதுக்கிவைத்துவிடுவதுபோல்... கடற்படை மீது நடத்தப்பட்ட பெரும் தாக்குதல் இந்த மாதத் திற்கு சிகரம் வைத்திருக்கின்றது. 22-ம் திகதி இரவு பருத்தித்துறை காங்கேசன்துறைக் கடற்பரப்பில் சிங்களக்கடற்படையின் இரு கப்பல்கள் தாக்கியழிக்கப்பட்ட நிகழ்வு இந்த வருடத்தின் ஒரு இனிய ஆரம்பமாகவே தோன்றி யுள்ளது. அதிவேகத் தாக்குதல் படகுகள் பீரங்கிப்படகுகள் புடை சூழ இறுமாப்போடு நகர்ந்து வந்த சிங்களக்கடல் அரக்கன் விடுத லைப் புலிகளின் படகுகளைக் கண்டு வியர்க்க விறுவிறுக்க ஓடித் தப்ப எத்தணித்ததும், விட்டுத்தி ரத்தி கடற்கரும்புலிகள் அதனைத் தாக்கியழித்ததும் வீரவரலாறு.

பதினொரு கடற்கரும்புலிகள் தங்களை தற்கொடை செய்து இந்த வீர வரலாற்றைப் பதித்துள் ளனர். இந்தக் கடற்சாதனையால் இம்மாதம் பெருமைகொள்கின்றது.

இது நடந்து மூன்றே நாளில் கிளாலி கடற்படையின் தளத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

மொத்தத்தில் இந்த மாதம் அதாவது 1998 பெப்ரவரி தன் சட்டைக்கொலரைத் தூக்கிவிட்டு பெருமைபேசிக்கொள்கின்றது.

என்றாலும் கூடவே ஒரு சோகம் வாட்டவே செய்கின்றது. திருக்கோணமலை தம்பலகாமத் தில் நடந்த இன அழிப்பில் பத் துக்கு மேற்பட்ட தமிழர்கள் பலி யானதை அறிந்ததில் நெஞ்சம் படபடக்கின்றது. வீட்டுக்குள் இருந்து தமிழர்கள் பலியானதை அறிந்ததில் நெஞ்சம் படபடக் கின்றது. வீட்டுக்குள் இருந்து தமிழர்கள் விலங்குகளாக இழுத் துச் செல்லப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட கொடுமை நிகழ்ந் துள்ளது. வழமையான விசார ணைகள் நடக்கும், அதேவேளை வழமைபோல் தமிழருக்கு நீதி கிடைக்காது.

அடுத்த மார்ச் மாதம் இந்த மனச்சுமையுடன் விடிகின்றது.

# நூல்களில் படித்தவை

மனிதகர்கள் தங்கள் இதயங்களில் ஓரேமாதிரியான எண் ணைத்க் கொண்டிருக்கும்போது அவர்களை எவற்றாலுமே தனி மைப்படுத்தமுடியாது. சிறைச்சாலைகளோ கல்லறைகளோ அவர்க ளைப் பிரித்துவிட முடியாது. ஒரே நினைவு ஒரே கருத்து ஒரே உணர்வு, ஒரே பெருமை அவர்கள் அனைவரையும் பிணைக்கும்.

— பிடல் காஸ்ரோ

மண்டேலா தலைமறைவு வாழ்க்கையில் கணிசமான பகுதி யைக் கழித்த இடம் ஜொகான்னஸ் பேர்க்கிற்கு அருகில் ரிவோனியாவில் அமைந்த லிலிஸ்லீப் பண்ணையில் ஆகும். அப்போது அவரின் பெயர் டேவிட்.

நாட்காட்டியில் தாளைக் கிழிக்கின்றோம் என்றால் அதனை அறிவோடும் சிந்தனையோடும் கிழிக்க வேண்டும். இனி அந்தநாள் திரும்பி வராதென்ற உணர்வுடன் கிழிக்க வேண்டும். அப்போதுதான் காலம் போற்றும் பண்பும் கடமை உணர்வும் தோன்றும்.

காலத்தை வீணாக்குவதைப் போன்ற சுலபமான காரியம் எதுவுமில்லை. அப்படி வீணாக்காமல் இருப்பதைப் போன்ற சிரமமான காரியமும் எதுவுமில்லை.

சிறுகதை



அரங்கு நிறைந்து விட்டது. வாத்தியகாரர் கரணம் போடுவதைப் பார்த்தால் ஒலி அளவு கட்டுப்பாட்டில் வரவில்லைப் போலத் தெரிந்தது. இப்போதே ஒரு மணி நேரம் தாமதம். பாடகர், இசையமைப்பாளர், கவர்ச்சித்தாரகைக்கென பல்வேறு ரகங்களில் ரசிகர்கள் அலை மோதினர்.

இதுவரை மலிவு விற்பனைக்கு வராத உடைகளின் மீது அளவிற்கு அதிகமான வாசனைத் திரவியங்களைக் கொட்டியபடி நிறையப்பேர் வந்திருந்தனர். நட்சத்திரங்கள் வருகிறார்களா என்பதை அவதானிக்க ஒருவர் பின் பக்கமாகப் பார்த்தாலே போதும் நூறு தலைகள் திரும்பும். இப்படியே திரும்பித் திரும்பிக் கழுத்துழைந்தவர் சும்மா இருந்தனர்.

வருகை தந்திருப்பது பிரபலமான தென்னிந்திய இசைக்குழு. விழா அமைப்பாளன் கலைப்புயல் ஆர்.ஆர்.தாசன். கச்சேரியை ஒழுங்குபடுத்தும்போது அவனிடம் புரண்டெழுந்த உற்சாகம் இப்போது முற்றாகவே வடிந்து போயிருந்தது.



"என்னண்ணே பாடகர் குணா வரேல்லையெண்டு கதையாக்கிடக்கு?" நாலைந்து இளசுகள் ஓடிவந்து குடி முழுகிவிட்டது போல காதைக் குடைந்தன.

"ஆக்கப் பொறுத்தனீங்கள் எப்பன் ஆறப் பொறுங்கோவன்" தாசன் அவர்களிடமிருந்து தப்பியோட, இடுப்பிலிருந்த மொபைல் சமயம் பார்த்துக் கிணுகிணுத்தது.

"அண்ணே வழியிலை கார் பிழைபட்டு நிற்கிறம். கவர்ச்சித் தாரகை ஜில் ஜில் ராணியும் வந்திருக்கிறா தானே?"

"ஓம்!ஓம்! எல்லாம் ரெடி! உடனை வந்து சேருங்கோ!" வயது போனவையும், ஞானப்பழங்களும் ஜில் ஜில் ராணிமீது கொண்டிருந்த மோகத்தைத் தாங்கமுடியாது மொபைல், "பற்றரி வீக்" என்று காட்டியது. எதைக் கவனிப்பதென்றே தெரியாது இசையமைப்பாளர் இருக்கும் ஹோட்டலை நோக்கி காரில் தாவினான்.

"இன்னாசார்! ஜனங்க வந்திட்டாங்களா"?

"சினிமாப்பாட்டுன்னா சும்மாவா? ஜனம் ஆறு மணிக்கே நெறஞ்சிருச்சி. கௌம்புங்க."

"ம்! ம்! மொதல்ல அண்ணா கிட்டே கேளுங்க" என்றபடி திரும்பிய பாடகர் பக்கத்து அறையிலிருந்து எட்டிப் பார்த்த கோரஸ் பாடகிகளைக் கண்டு கொண்டார். முகத்தில் வெறுப்பைக் காட்டி, அவர்களை முதலில் கூட்டிச் செல்லும்படி கூறிவிட்டு, அறைக்கதவைச் சாத்திக் கொண்டார். செய்வதறியாது அடுத்த அறையில் மனைவியுடன் இருந்த இசையமைப்பாளரைத் தேடி ஓடினான்.

"அண்ணே! "ஜனம் பிச்சுக்கிட்டு வந்திருக்கு! சீக்கிரம் புறப்படுங்க!"

"அ....பொறப்படலாம்..... பொறப்படலாம்... வாத்தியக்காரங்க போயிட்டாங்களா?"

"அடேயப்பா அவங்க போயி ரெண்டுமணி

நேரமாச்சே!" அவர்களைக் கொண்டுபோய்ச் சேர்க் கப்பட்ட பாட்டை ஒப்பாரி வைக்க இது நேரமில்லை என்பதால் அடக்கிக் கொண்டான். இசையமைப் பாளர் ஏதோ இராகத்தை ஆலாபனை செய்தபடியே ரோமாபுரி எரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னனைப்போல அலட்சியமாகக் கதிரையில் சாய்ந்து கொண்டார்.

ஏற்கனவே விமானத்தில் வரவேண்டிய தபேலா செற் ஒன்று வந்து சேரவில்லையெனக் கூறி இசைய மைப்பாளர் விமான சேவையைத் திட்டிக் கொண்டி ருந்தார். உண்மையில் அது எங்குமே தொலைய வில்லை அவருக்குத் தெரியாமலே பாதிவிலைக்கு விற்பனையாகிவிட்ட செய்தியைச் சொல்லலாமா விடலாமா என்பது தெரியாமல் தடுமாறினான்.

"மிஸ்டர் கொஞ்சம் நில்லுங்க!" பெண்குரல், திரும்பிப் பார்த்தான் பாடகரின் மனைவி.

"தமிழ் நாட்டிலே இருந்து இப்பத்தானே மியூசிக் காரங்களை மொததடவை கொண்ணாந்திருக்கி றீங்க?"

"ஆமா!"

"நீங்க ஒண்ணுமே புரியாத ஆளா இருக்கிறீங் களே! மொதல்லே தாளவாத்தியக்காரங்க போயி காத்துக்கிட்டிருக்கணும். அப்புறமா ஜனங்க, பொறவு கீபோட், கிற்றாரிஸ்ட் எல்லாம் போனதுக்கப்புறந்தா பாட்டுக்காரங்க போவாங்க. எல்லாருமே அரை மணி நேரம் காத்துக்கிடக்கணும். அப்புறந்தா அண் ணனும் டான்சரும் வருவாங்க புரியுதா! போங்க போங்க!" கதவைச் சாத்திவிட்டாள்.

ஆயிரம் பேர் ஒரு மணி நேரம் காத்திருந்தால் மொத்தமாக ஆயிரம் மணித்தியாலங்கள் நாசம். இப்படியே போனால் வந்திருக்கும் ஆயிரம் பேரும் மேலும் ஒருமணி நேரம் தாமதிக்க வேண்டி வரும் போலத் தெரிந்தது.

கோரஸ் பாட்டுக்காரரை ஒரு பழைய காரில் ஏற்றிவிட்டு, தன்னிடமிருந்த போட்லுமாண்டியோ காரில் பிரதான பாடகர்களை ஏற்றிவிட பெரும் பாடுபட்டான். பான் மசாலா பாக்கைச் சப்பி வழிநெடுக வாயை உதறியபடியே நடந்து கொண்டி ருந்தார் பாடகர் குணா. சுவரில் குத்தி நூர்க்கப்பட்ட பீடித்துண்டுகள் ஹோட்டலுக்கு தண்டம் கட்டாமல் தப்ப முடியாதென்று எச்சரித்தன.

எப்படியோ எட்டுமணிக்கு ஐந்து நிமிடங்களிருக்க ஒருவாறு இசையமைப்பாளர் கவர்ச்சித் தாரகை யுடன் மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார். எல்லோரும் தம்மை மறந்து கைதட்டினார்கள்.

இனியும் தாமதிக்கமுடியாதென்பதால் இசைய மைப்பாளரை நேரே மேடைக்கே கூட்டிவந்தான். அவருக்காக பெருந்தொகை செலவு செய்து மலர்ச் செண்டை வரவழைத்து, அதைக் கொடுப்பதற்காக தனக்குத் தெரிந்த வெள்ளைக்கார மாது ஒருவரையும் ஒழுங்குபடுத்தியிருந்தான். இரண்டு மணிநேரமாக பூச்செண்டுடன் காத்திருந்தவள் ஒருவாறு பூச் செண்டை வழங்க, எல்லோரும் மறுபடியும் கரகோ சித்தனர்.

மலர்ச்செண்டை அலட்சியமாகப் பார்த்த இசை யமைப்பாளர் அதை மக்களை நோக்கி வீசினார். பூக்கட்டுக்கள் சிதறி ஒவ்வொன்றாக விழுந்தன. பூக்களை எடுக்க சிலர் எழும்பி ஓடினார்கள். அதற் குள் பாடல் ஆரம்பித்தது. காத்திருந்து களைத்த வெள்ளைக்காரி தான் வழங்கிய பூக்கள் தூக்கி வீசப்பட்டதை நினைத்துக் கோபமடைந்திருக்க வேண்டும். மண்டபத்தை விட்டு வேகமாக நடக்கத் தொடங்கினாள். இடைவேளையின் பின் மேலும் சிலருக்குப் பரிசுகள் கொடுக்க வேண்டியிருந்ததால் அவளைச் சமாதானப்படுத்த ஓடினான் தாசன்.

கூச்சல் குழப்பமிருந்தாலும் அடிபிடியின்றி ஒரு வாறு கச்சேரி முடிவடைந்துவிட்டது. பாடகர்க ளுடனும் கவர்ச்சி நடிகைகளுடனும் சேர்ந்து படம் பிடிக்க நிறையப்பேர் கூட்டம் கூடிநின்றனர்.

இசைக்குழுவை மறுபடியும் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றால் குடி முழுகிவிடும். மண்ட பத்தின் முன்புறம் வைத்தே வாடகை வண்டியில் எல்லாப் பொருட்களையும் ஏற்றினான் தாசன். இரவுப் பொழுதை விமான நிலையத்தில் கழித்தால் ஹோட்டல் செலவு மிச்சம் என்பது அவனது கணிப்பு.

"இந்தாபாருங்க இந்தப் பெட்டிங்களை ஜாக்கிர தையா ஏத்தியிருங்க... என்னா...?" காரின் பின்புறம் கிடந்த பத்துப் பதினைந்து காட்போட் பெட்டிக ளைக் காட்டினார் இசையமைப்பாளர்.

"என்னாங்க இது?"

## நன்றோ தீதோ

இலங்கைக்குச் சென்ற அனுமன் இலங் கையிற் செய்த அக்கிரமங்கள் பற்றி, ராமன் ஒரு வார்த்தையாவது கேட்டானா? அப்படிக் கேட்டிருந்தால் அவன் என்ன பதில் சொல்லி யிருப்பான்?

மலேஷியாவின், பினாங்கில் 'பீக்கிங் ஹோட்டலில்' படுத்திருந்தபோது, எனக்குத் தோன்றியது இது;—

தேங்குநார் உடைத்த வெள்ளத்
  தினைவனம் அழித்தல்போல்
தீங்குநான் புரிய லுற்றேன்
  திருமகள் திவலை எண்ணி
விங்குநீர் இலங்கைக் கென்னை
  விடுத்தனை நன்றோ தீதோ
ஆங்குநான் செய்த பாவம்
  அரியணை புரிந்த ஒன்றே!

"இத மத்த நாட்டுல கொடுத் தாங்க! ஆளுக்கொரு பரிசு! வெரி நைஸ்!"

அவங்கெல்லாம் உன்னைப் போல வெறும் பூச்செண்டுப் பேர்வழிகளா என்ற வினாவைச் சொல்லாமலே புரியவைத்துவிட்டு, வேறு யாரையோ அழைப்பது போல பாவனை பண்ணி நகர்ந் தார்.

அந்தப் பெட்டிகளைப் பார்த் தால் அவை ஐரோப்பாவின் பல நாடுகளுக்கு ஏறி இறங்கி வந்திருப் பது தெரிந்தது. அவைகளில் விமான நிலையங்கள் தங்கள் முத் திரைகளை பல வர்ணங்களில் குத்தியிருந்தன. அவற்றை பத்திர மாகத் தூக்கியெடுக்கத் தொடங்கி னான். பழைய நாரிக்குத்து எங்கோ ஒரு மூலையிலிருந்து கடுக்கி, "உனக்கெல்லாம் இது தேவை தானா" என்று வினவியது. அப் போது பார்த்து எதிர்பாராத வகையில் ஒரு பெட்டி வழுக்கிக் கீழே விழுந்தது. "கிலிங்!" என்ற சத்தம். வெள்ளை நிறமான கண் ணாடிக் கிளாஸ்களில் இரண்டு மூன்று உடைந்து போயின. அதில் தாசனின் உருவம் பலவடிவங்க ளில் தெரிந்தது. பெட்டியை மூடிக் கட்டி வண்டியில் தள்ளினான்.

"மிஸ்டர் தாசன் கொஞ்சம் வர்ரீங்களா!" இசையமைப்பாளர் அவனை ஒதுக்குப்புறமாக அழைத் துச் சென்றார். தவறுதலாக உடைந்து விட்டதாகக் கூறிச் சமாளிக்கலா மென நினைத்துக் கொண்டான். கிளாஸ்கள் உடைந்த சத்தம் அவர் காதில் விழவில்லையென்பதை பின்புதான் தெரிந்துகொண்டான்.

அவன் முகத்தை தடவியபடியே, "சின்னதா நானூறு டாலருக்கு ஒரு செக் எழுதிக் கொடுத்திடுங்க" என்று தாழ்ந்த குரலில் வாசித்தார்.

"என்னங்க இது பேசினபடி பத்தாயிரம் டாலரும் முந்தியே வாங்கிட்டீங்களே!"

"அட நீங்க ஒண்ணு! அது கச்சேரிக்கு இது இன்கம்டாக்ஸ் காரங்களுக்கு"

தாசனுக்கு தப்ப வழி தெரிய வில்லை. நானூறை சரிபாதியாகக் குறைத்து, இருநூறு டொலருக்கு ஒரு செக் எழுதினான். அது இன் கம்டாக்ஸ்காரருக்கு இசையமைப் பாளரின் விலை குறைந்த கண் ணாடிக்கிளாசாக இருக்கலாமென எண்ணியபடியே "சார்" ரென செக்கை ஒடித்துக் கிழித்தான்.

இசையமைப்பாளர் கோஷ்டியு டன் விடைபெற்றார். அப்பாடி என்றிருந்தது அவனுக்கு. பஸ்வண்டி மெல்ல நகர்ந்தது. கைகளைக் காட்டி விடைகொடுத்தான். அப் பொழுதுதான் பாடகர் குணாவி டம் கைமாத்தாகக் கொடுத்த மொபைல் நினைவுக்குவர துடித் துப் பதைத்து, ஓடும் பஸ்சை வேக மாகத் துரத்தத் தொடங்கினான் தாசன்.

*யாவும் கற்பனை*

# படைப்பாளிகளே ஏன் தயக்கம்?

**புதிய உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் உங்கள் ஆக்கங்களைத் தாங்கிவர பாலம் தயாராகிவிட்டது. தங்கள் ஆக்கங்களையும், காத்திரமான அனுபவப் படைப்புக்களையும், இதுவரை பிரசுரிக்கப்படாத புத்தம்புதிய உருவாக்கங்களையும் அனுப்பி வையுங்கள். பல்வேறு கோணங்களிலான உங்கள் பார்வைகளை புலம் பெயர்ந்தோர் நாடுகளெங்கும் பரிமாறிக்கொள்ள இது ஓர் பாலம்.**

**உங்கள் ஆக்கங்களைத் தயாரிக்கும் போது பக்கங்களைக் கவனத்தில் கொள்ளுங்கள். கணணி வடிவமைப்பு ஓவியம் போன்றவைக்கும் உங்கள் எண்ணங்களில் இடம் வைத்துத் தயாரியுங்கள்.**

**புதிய செய்திகள், புதிய படைப்புக்கள், புதிய ஓவியங்களுடன் பெறுமதியான பக்கங்களை உருவாக்கும் பணிக்கு அனைவரிடமிருந்தும் ஒத்துழைப்பை நாடுகிறோம்.**

**கட்டுரைகள், ஓவியங்கள், சிறுகதைகள், புகைப்படங்கள், துணுக்குத் தகவல்கள், மறக்கமுடியாத அனுபவங்கள், அபூர்வமான தேடல்கள், விளையாட்டு, தொழில்நுட்பம் உட்பட பல்துறை சார்ந்தவர்களிடமிருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.**

**ஒவ்வொரு வீட்டிலும் பாலம் படிக்கப்பட வழிகொள்வோம்.**

# பாரிஸில்

உங்களுக்குத் தேவையான புதிய
பழைய பாடல்கள் திரைப்படங்கள்
கொம்பக் டிஸ்குகளிலும் (CD)
பெற்றுக்கொள்ளவும் மற்றும்
பழைய புதிய திரைப்படங்கள்,
திரைப்படப்பாடல்கள் ஆகியவற்றை
வீடியோ கசற்றுக்களில்
பெற்றுக்கொள்ளவும் நீங்கள்
பாரிஸ் லாச்சப்பலில் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்.

LUNE

INTERNATIONAL

5 Rue Perdonnet, 75010
Paris. Mo: La Chapelle

# பொறுமையைக் கடைப்பிடித்து நிதானம் காக்க வேண்டும்

நகர்ந்து செல்லும் புதிய உலக வழக்கில் மனிதன் தேவைக்கேற்ப அவனது செயல்களும் விரைந்து செல்வது என்றும் தவிர்க்க முடியாத ஒன்றுதான் அதிலும் இன்றைய கால கட்டத்தில் மக்கள் மத்தியில் ஏதோ ஓர் அச்சமும் பரபரப்பும் படுவேகமும் காணப்படுவதை மனோவியல் ரீதியாக எம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது.


அதிகாலையில் எழுந்துகொண்டு கலா தன் கணவன் வேலைக்குச் செல்ல வேண்டும் பின் தமக்கை தம்பிமார் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும் என்பதற்காக பரபரத்து சமயற்கட்டில் புகையுடன் போட்டி போட்டுக் கொண்டு சமைத்து முடிக்கிறாள். பின்பு காலைக் கடன்களை மின்சார வேகத்தில் முடித்துக் கொண்டு அவித்த இடியப்பத்தில் பாதியைமென்று விழுங்கிய படி ஓடிப்போய் பேருந்து நிலயத்தில் காவல் நிற்கிறாள் ஒரு மணித்தியாலமாக காவல் நின்ற பின்பு- கரும்புகையையும் கிறவல் புழுதியையும் கக்கிக் கொண்டு வந்த அந்த பஸ் நிற்கிறது.

அப்பாடா இது என்ன சனம் முண்டியடித்துக் கொண்டு ஒருவர் தோளை ஒருவர் பிய்த்து இழுத்த படி போட்டி போட்டுக் கொண்டு பஸ்ஸில் ஏறுகின்றனர். எஞ்சி இருந்த ஆட்களை எங்கே போட்டு விடலாம் என்ற நிலையில் பஸ்ஸில் வெளிக்கதவில் தொங்கிக்கொண்டு நிற்பவர்களை ஆட்டி அசைத்து புழுதியில் புரட்டி எடுத்துக்கொண்டு அந்த பஸ் புறப்படுகின்றது. ஏன் இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டு இருக்கும் போது இன்று 02,06,97 இல் மாங்குளம் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி வந்த பேருந்தில் இருந்து ஒருவர் ஓலுமடுவில விழுந்து இறந்துவிட்டார். அதற்கிடையில் பஸ்ஸுக்குள் நடைபெறும் அமளிதுமளிகள் பஸ்ஸிலுள்ள சன நெரிசலுக்கு மத்தியில் திக்குமுக்காட வேண்டும். அதற்கிடையில் ரிக்கட் கொடுப்பவரிடம் ஒரு ரிக்கட் வாங்குவதற்கிடையில் பஸ்ஸுக்குள் நிற்பவர்களுக்கு கைசோர்ந்து ஆத்திரம் வந்துவிடும் ஒருவரின் மூச்சு மற்றவரில் பட்டு வயிற்றைக் குமட்டி வாந்தி வந்துவிடும் போன்றே இருக்கும் வியர்த்துக் கொட்டும் வியர்வையால் இரண்டாம் தடவை குளித்த உணர்வு ஏற்படும்.

இத்தனை தடகளையும் தாண்டி அலுவலகம் சென்றால் சில நிமிடங்கள் அலுவலகத்திற்குப் பிந்தி வந்து விட்டோம் என்பதற்காக அதிகாரி பேசிவிடுவாரோ என்கிற பயம் ஒரு புறம் இப்படிப் பதட்டப்பட்டு பதட்டப்பட்டே மனித வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது.

இது தனியாக ஒருவருக்கு மட்டும் ஏற்படுவதில் அதிலும் எமது நாட்டைப் பொறுத்தவரை போர் அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து இன்னலுறும் மக்களை அடுத்த ஷெல் எங்கு விழும் படையினரின் அடுத்த நகர்வு எங்கு இருக்கும் விமானம் எங்கு குண்டு போடும் என்கிற பதட்ட நிலையிலேயே வாழ்கின்றனர்.

## உலகத்திலேயே நீளமான கார்



1992-ம் ஆண்டு உலகத்தில் 47.955.000 வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றில் 34.838.000 மோட்டார் வாகனங்கள். உலகிலேயே வாகன உற்பத்தி, உதிரிப்பாகங்கள் உற்பத்தியில் முன்னணியில் நிற்போர் அமெரிக்க ஜெனரல் மோட்டார் நிறுவனமே.

காரை அதிகளவில் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஜேர்மனியைச் சேர்ந்த Volkswagen நிறுவனமே ஆகும்.

உலகிலேயே அதிக நீளமான காரை அமெரிக்காவைச் சேர்ந்த Jay Ohrberg என்பவர் வடிவமைத்தார். இந்தக் காரின் நீளம் 30.48 மீற்றர். 24 சக்கரங்களைக் கொண்ட இந்த வாகனத்தில் நீர்த்தடாகமும் உள்ளது.

இன்னொரு பக்கம் அடுத்த தடவை மலேரியா எப்போது வரும், டயறியா எப்போது வரும் செபிரி சீமியா எங்களுக்கு வந்து விடுமோ இதற்கிடையில் நாம் யாழ்ப்பாணம் சென்றால் தப்பித்து விடுவோமோ என்ற பதட்ட நிலை இப்படி அன்றாட மனித வாழ்க்கையிலும் எமது தமிழீழ மண்ணில் நிலவும் போர்ச் சூழலிலும் மக்கள் படும் அவஸ்தைக்கும் பதட்டத்திற்கும் அளவே இல்லைத்தான். இதனை ஓரளவுக்கேனும் நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வழி அமைப்போம்.

நாம் எந்த ஒரு வேலையை செய்யும் போதும் முன் திட்டம் ஏதும் இன்றி தொடங்குவோமானால் அந்த வேலை கடிவாளமற்ற குதிரையின் விசைக்கு ஒப்பானதாகவே இருக்கும் இதுதான் இன்றைய பதட்ட நிலையைப் போக்கும் காரணமாகும் முதலில் நாம் வேலை முடிந்து வீட்டிற்குச் சென்றதும் எமக்கென எமது கடமைகளை விரைவுபடுத்தும் கடமைப் பட்டியல் ஒன்றைத் தயார் செய்து முன்கூட்டியே எமது வேலைகளை அந்த ஒரே அட்டவணையின்படி ஒழுங்கமைத்துக் கொள்ளலாம். எமது நேரத்தை மீதப்படுத்தலாம். வாகனத்தில் முட்டி மோதி தொங்கிச் செல்வதிலிருந்து சமையல் கட்டில் புகையில் தத்தளிப்பது வரை தவிர்த்துக் கொள்ளலாம்.

அடுத்து இப்படியான பதட்டம் ஏற்படும் தறுவாயில் ஒருசில நேரம் பொறுமையைக் கடைப் பிடித்து பாருங்கள் பொறுமை உங்கள் உங்கள் பதட்டத்தை தீர்க்கும். அதன் பின்பு உங்கள் அதிகாரியிடம் நிலமையை விளக்கி ஆறுதலாக கதைத்துப் பாருங்கள் அவர் உங்கள் நிலை அறிந்து உங்களை மன்னிப்பார்.

அது மட்டுமன்றி நாம் எந்த இடத்திலும் நாம் எமது நிதானத்தை தவறவிடக்கூடாது ஒருவர் நிதானமிளந்து நிலைதடுமாறினால் படுகுழியில் விழப் போகிறார் என்பதில் ஐயமில்லை.

00

# உலகத்தின் இறுதி நாட்கள்!

ஈராக்கின் மீது அமெரிக்கா தாக்குதலை ஆரம்பிக்குமானால் அதுவே உலகத்தின் இறுதிநாட்களாக இருக்கும். இப்படி அமெரிக்காவை எச்சரிக்கை செய்தவர் வேறுயாருமல்ல ரஸ்ய அதிபர் பொறியியல் ஜெல்ஸ்ரினே. ஈராக் அமெரிக்க யுத்தம் இரண்டாவது தடவை ஆரம்பிக்குமானால் அது மூன்றாவது உலக யுத்தமாகும். மூன்றாவது உலக யுத்தம் மட்டும் நடைபெற்றால் மனிதர்கள் மட்டுமல்ல பூமியே இருக்க முடியாதென்பது இதன் கருத்து விஞ்ஞானத்தின் விட்டுக்கொடாத அதி உக்கிர மோதல் உலகத்தை தூசிப்படலமாக்கிவிடும்.




இந்தக் கருத்தை முன்னர் வெலிக்கோவ்சி என்னும் ரஸ்ய விஞ்ஞானி வேறொருவிதமாக வல்லரசுகளுக்கு விளங்கப்படுத்தியிருக்கிறார். நவக்கிரகங்களில் பத்தாவது கிரகமாக "மால்டக்" என்ற கிரகம் இருந்திருக்கிறது. இது செவ்வாய்க்கும் வியாழனுக்கும் மத்தியில் காணப்பட்டது. இந்தக் கிரகத்தில் வாழ்ந்த குறுகிய மனப்பான்மை கொண்ட விஞ்ஞானிகளிடையே ஏற்பட்ட மோதலால் அந்தக் கிரகமே வெடித்துச் சிதறியது. பூமியில் வருடந்தோறும் சொரிந்து கொண்டிருக்கும் தூசுப் படலம் அக்கிரகத்தில் நடைபெற்ற அணு யுத்தத்தின் அவலமே என்றும் தெரிவித்தார். ஆயினும் இவரது கருத்துக்களை உலகம் இன்றுவரை ஒப்புக் கொள்ளவில்லை. 'மால்டக்' இருந்ததோ இல்லையோ உலகம் இன்னொரு மால்டக் ஆகிவிடக்கூடாது என்ற எண்ணம் காலம் சென்ற ரஸ்யரான வெலிக்கோஸ்சிக்கு இருந்திருக்கலாம்.


இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தானியாவின் பிரதமராக இருந்து மறைந்த வின்ஸ்டன் சேர்ச்சில் மிகவும் நகைச்சுவையாகப் பேசுவதிலும் பதில் சொல்லுவதிலும் வல்லுனர். ஒரு முறை அவர் கூட்டத்தில் பேசி முடித்ததும் அவரைச் சந்தித்த ஒரு பெண், "நீங்கள் பேசும் போது உங்கள் பேச்சைக் கேட்க ஏராளமான மக்கள் வருகிறார்கள். இந்த மண்டபம் எப்போதுமே நிரம்பி வருகிறது" என்று கூறினார்கள் அதைக் கேட்ட சேர்ச்சில் "அம்மணி நீங்கள் சொல்வதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது அதேவேளை என்னைத் தூக்கில் போட்டால் அதைப் பார்ப்பதற்கு இதிலும் இரண்டு மடங்கு மக்கள் வருவார்கள்" என்று நகைச்சுவைபடக் கூறினாராம்.

# மனிதன் சந்திரத் தரையில் காலடி வைத்தது உண்மைதானா?

அமெரிக்கரான நீல் ஆம்ஸ்ரோங் 1969–ல் சந்திரத் தரையில் காலடி பதித்து, கால் நூற்றாண்டு கழிந்து போய்விட்டாலும், இன்றும் அப்பயணத்தின் மீதான சந்தேகப் பார்வையைப் பலர் மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. இப்பொழுது புதிய சந்தேகங்கள் சந்திரத்தரையிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து கிளம்பியுள்ளன. இத்தகைய சந்தேகங்களுக்குரியவர் பிரித்தானியப் புகைப்பட நிபுணரான டேவிட் பேர்சி என்பவராகும்.

அப்பலோ பயணத்தின் போது வெளியான புகைப்படங்களின் தொகுப்பை ஆராய்ந்த இவர் அவற்றிலிருந்து தெறிப்படையும் ஒளிக்கற்றைகளின் அளவு, மறுபக்கமாக விழும் நிழலின் கோணம் ஆகியவற்றை அவதானித்தால்; இந்தப் படங்கள் இரகசியமாக அமைக்கப்பட்ட ஓர் படப்பிடிப்பு







பிரித்தானிய நிபுணரான டேவிட் பேர்சி என்பவர் இப் புகைப்படங்களை ஆராய்ந்து, இவை அமெரிக்காவில் ஒரு ரகசியமான படப்பிடிப்பு நிலையத்தில் பிடிக்கப்படவை என கூறுகிறார்.


நிலையத்தில் செயற்கையான ஒளி பாய்ச்சி எடுக்கப்பட்டவை என்பதை அறியமுடியும்.

இந்தப் புகைப்படம் சூரிய வெளிச்சத்தில் பிடிக்கப்பட்டிருந் தால் அமெரிக்கக்கொடி இவ் வளவு பிரகாசமாகத் தெரிந்திருக்க முடியாது. தரையிறக்கப் பட்டுள்ள வாகனங்களி லோ சூரிய நிழல் விழு கிறது. அருகில் நிற்கும் மனிதனின் முதுகுப்புறம் விழும் ஒளியால் முன் புறம் மங்கிய இருளாகத் தெரிகிறது. இது சரியா யின் கொடியின் பின்புற மாக விழும் ஒளி, அதன் முன்புறத்தை இருளாக்கியிருக்க வேண்டும். ஆனால் கொடி யில் காணப்படும் துலக்கமான ஒளித்தெறிப்பு அதன் மீது செயற் கையான ஒளி பாய்ச்சப்பட்டிருப் பதைத் தெளி வாகக் காட்டுகிறது என்பதே அவரின் வாதம்.

இதை பிரித்தானிய வானியல் கழகத்தைச் சேர்ந்த பீற்றர் கிறகோ என்பவர் மறுத்துள்ளார். டேவிட் பேர்சி சொல்வதுபோல சந்திரனுக் கான ஒளி சூரியனிலிருந்து மட்டும் வரவில்லை. அதைவிட 68,4 மட ங்கு அதிகமான ஒளி பெறும் பூமியிலிருந்தும் கிடைக்கிறது. இத் தகைய ஒளிக்கற்றைகள் ஒழுங்கற்ற சந்திரத் தரையில்பட்டு கொடியின் மீது எறியப்பட்டிருக்க லாம் என்கிறார்.

ஆனால் விடயம் இத்தோடு முடிந்தபாடாக இல்லை. ஜேம்ஸ் ஒப்ரா என்கின்ற விண்கலப் பொறியியலாளர் கூறுகின்றபோது, இயற்கையான ஒளியில் புகைப் படம் பிடித்தால் வானத்திலுள்ள நட்சத்திரங்கள் தெரியும். ஆனால் மின் விளக்குக ளைப் பொருத்திப் படமெடுத் தால் வானத்தி லுள்ள நட்சத்திரங் களை அது பதிவு செய்யாது. கீழே உள்ள படம் செயற்கையான மின் விளக்குப் பொருத்தி எடுக்கப் பட்டதென்பதற்கு ஆதாரம் அதன் பின்புறமாக நட்சத்திரங்களைக் காணமுடியவில்லை என்கிறார்.


மேலும் அடுத்துள்ள புகைப் படத்தில் விழும் நிழல் ஒரேகோ ணத்தில் அமைந்திருக்கவில்லை. மனிதனின் பின்புறம் விழும் நிழல் ஒரு கோணத்திலும்; முன்புறமாக



உள்ள சிறு கற்களின் நிழல் வேறு ஒரு கோணத்திலும் காணப்படு கிறது. எனவே இப்படத்தில் செயற் கையான விளக்குகள் பூட்டப் பட்டு, செயற்கையாகச் செய்யப் பட்ட சந்திரத்தரையையே காண்கி றோம். இப்படியாக வாதங் கள் வளர்ந்து செல்கின்றன. சந்திர னில் இறங்கவில்லையென அமெ ரிக்கர்களே சொன்னாலும் இனி உலகம் ஏற்கப்போவதில்லை. இதை வெறுமனே டேவிர்பேர்சி என்கின்ற புகைப்படவியலாளரின் வாதமாகவே உலகம் நோக்கு கிறது.

சந்திரனில் இறங்கவில்லையென அமெரிக்கர்களே சொன்னாலும் இனி உலகம் ஏற்கப்போவதில்லை. இதை வெறுமனே டேவிடபோர்சி என்கின்ற புகைப்படவியலாளரின் வாதமாகவே உலகம் நோக்குகிறது.

நன்றி: ILLUSTRERET VIDENSKAB



# குன்ரர் கிராஸ்



குன்ரர் கிராஸ் (Gunter Grass) 70 வயது!

இவர் ஜெர்மனியின் மூதன்மைமிக்க எழுத்தாளர்; ஓவியர்; கற்சிலைச்சிற்பி; நல்ல கவிஞர். இவைகளுக்கு மேல் அவர் ஒரு சிறந்த மனித நேயவாதி!

அரை நூற்றாண்டாய் ஜேர்மனிய மொழியில் பல நாவல்களையும், கவிதைகளையும், கட்டுரைகளையும் தந்துள்ளார்.

நிலவுகின்ற சமூக யதார்த்தத்திற்கு எதிராய், கலக்கக்காரனாய் மனித நேயத்திற்காக இலக்கியத்தை அதன் சாத்தியப்பாட்டிற்கப்பால் நகர்த்திக் கொண்டிருப்பவர்.

இவர்தான் குன்ரர்கிறாஸ் (GUNTER GRASS).

எழுபதைத் தாண்டிய தும்புக்கட்டை மீசைக்கார கிழட்டுச் சிங்கம்; அவரோடு என்றும் பிரியாதிருக்கும் புகைப்பிடி கங்கான்; புக்கு, புக்கு புகைக்கூடாக பறந்துவரும் வார்த்தை வாள்கள். அது, எப்போதும் ஆளும் வர்க்கத்தின் குரல் வளைகளைக் குறிபார்த்துத் திரியும்.

அவரது முதல் நாவல் Die Blechtfommel (தப்பட்டை). இது மிக மிக முக்கியமான இலக்கியம் ஜேர்மனிய மொழியில். கோதேயின் (Wolfgang GOETHE) "Faust" சோக நாடகத்தின் சமூக யதார்த்தத்திற்குரிய நிகரான படைப்பு குன்ரர்கிராஸினது படைப்பு. தப்பட்டை போன்ற ஒரு பறையை வைத்துக்கொண்டு கிராஸின் பாத்திரமான ஒஸ்கார் (OSKAR) என்ற சிறுவன் எத்தனை வகை, வகையான ஆவேஷத்தை வெளிக்கொணர்கிறான்! தன் பார்வையால் கண்ணாடி ஜன்னல்களைச் சிதறடிப்பான்; அது எனக்குச் சமூக அவலங்களை உடைப்பதுபோல் படும். இப் பாத்திரம் குன்ரர் கிராஸின் தலை சிறந்த பாத்திரம்.

இப்படி எத்தனையோ உயர்ந்த படைப்புக்களோடு அவர் இச் சமூகத்தை எதிர்கொள்கிறார். சமீபத்து அவரது நாவல் WEITER FELD மூலம் சிறந்த எதிர்ப்பிலக்கிய வாதியாகத் தன்னை இனம் காட்டுபவர்.

இன்றைக்கு இவன் மிகவும் பேசப்படும் ஒரு மனித நேயவாதி. சென்ற மாதம் ஒக்டோபரில் தனது 70 வது வயதை கொண்டாடிய கையோடு பிராங்பேர்ட் நகரத்திற்குச் செல்கிறார்.

ஒக்டோபர் மாத ஒரு காலைப் பொழுது. பிராங்பேர்ட் நகரத்தின் மத்தியில் விரிந்து கிடக்கும் சென் பவுல் (St.Paul) தேவாலயம் பெரும்புள்ளிகளால் நிறைந்து வழிகிறது.

அங்கே–

ஜேர்மனியின் முன்னாள் முதற் குடிமகன் திரு. றிச்சாட் பொன் வைச்சேகர், இன்றைய தொழில் மந்திரி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் முதல் மேயர்கள், வெளிநாட்டு யூத ஆணைக்குழுக்களின் தலைவர்கள் என பல கோமான்களும், சீமாட்டிகளும் சூழ்ந்துகொண்டார்கள்.

இங்கு சமாதானத்திற்கான பரிசு பெறப் போகிறார் ஒரு முக்கிய எழுத்தாளர்.

துருக்கிய மொழியில் பல நூறு சிறுகதைகளை; கவிதைகளை; கட்டுரைகளை எழுதியும் அத்துடன் நூற்றுக்கு மேலான நாவல்களையும் எழுதிய திரு. யசார் கேமல் (Yasar Kemal) என்ற எதிர்ப்பிலக்கிய வாதிக்கு ஜேர்மனிய புத்தகநிறுவனச் சங்கத்தின் சமாதானத்துக்கான பரிசு கிடைக்கப்போகிறது.

97 ஆம் ஆண்டிற்கான பரிசுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இப்பரிசுக்கு அவர் அருகதையானவரே தாம்!

இந்த நிகழ்வுக்கு வருகிறார் குன்ரர் கிராஸ்.

இவ்வளவு பெரிய புள்ளிகளுக்கு முன் நின்று அவர் உரையாற்றவேண்டும்.

வரவேற்பு உரையல்ல; சிறப்புரை!

இந்தச் சமூகத்தின் காவலர்களுக்கு முன் நின்று இச் சமூகத்தையே கேள்வி கேட்கிறார் அவர்.

எல்லோரும் விழிக்கிறார்கள்.

அடடா! இந்த கலகக்காரனைப் போய் பேச

*விட்டுள்ளார்களே!! இப்படிப் பலர் முகத்தைச் சுழித்தபடி.*

*இவனின்றி யாரிங்கு இலக்கிய வாதி?*

*முதியவன்; சிறந்த நாவரசன் மிக அற்புதமான மனிதநேய எழுத்தாளன்.*

*இவனைவிட்டு, வேறுயாருமே பொருத்தமில்லை இவ் வைபவத்திற்கு. இது சென் பவுல் தேவாலயத் தில் பரிசளிப்பு விழாச் செய்ய முற்பட்டவர்களுக்குத் தெரிந்த விடயம்.*

*அது மட்டுமா?*

*பரிசுக்குச் சொந்தக் காரரான* Yasar Kemal, *கிராசின் நீண்டகால இலக்கிய நண்பர்.*

*புலம்பெயர்வுச் சூழலில் துருக்கிய எழுத்தாளன்* Yasar Kemal *தன் நாட்டை கழுமரத்தில் ஏற்றியுள் ளார்; குர்திஷ்தான் அரசியலில் குருதி தோய்ந்த வர லாற்றுக்குச் சொந்தக்காரர்கள் துருக்கிய மக்களும்– ஆட்சியாளர்களும் தன் நாட்டை சவுக்கடி கொடுத்து நீதி கேட்கிறார் திரு.* Yasar Kemal.

*துருக்கியின் அரசியல் சாக்கடையை ஐரோப்பி யத் தெருவெங்கும் இழுத்து நாறடிக்கப் பண்ணியவர் இவர்.*

*இவருக்கு பரிசளிக்கும் நிறுவனத்தின் நோக்க மென்ன; கவனமென்ன என்பதில் கிராஸ் நுட்ப மாகக் கவனத்தைச் செலுத்தினார்.*

*கிராஸ் கூறுகிறார் (உரையாற்றுகிறார்):*

"...Mit Waffen xporten in die Turkei Todbringendem Handel zu zulassen"

*"துருக்கிக்கு ஆயுதம் ஏற்றுமதி செய்வது மரணத் தைக் கொண்டு வரும் செயற்பாடு" என்கிறார். அவர் தொடர்ந்து குர்திஸ்தான் மக்களுக்கான "அகதிய அந்தஸ்தை" நிராகரிக்கும் ஜேர்மனியின் செயல்பற்றி விவரிக்கிறார்:*

## இதுவா கருத்து?

தந்தி முறையைக் கண்டுபிடித்த சாமுவேல் மோர்ஸ் சிறந்த ஓவியராக வும் விளங்கினார்.

மரணப் படுக்கையில் துன்ப வேத னையில் துடிக்கும் ஒருவனின் ஓவி யத்தை வரைந்த மோர்ஸ் தன் நண்பரான மருத்துவரிடம் அதைக் காட்டினார்.

"இதைப்பற்றி என்ன நினைக்கிறீர் கள் என்று" கேட்டார்.

அந்த ஓவியத்தைப் நன்றாகப் பார்த்த மருத்துவர் "அவனுக்கு மலே ரியா நோய் கண்டுள்ளது என்றார்.

"Es ist wohl so, dab wir alle untatige zeugen eine aber maligen, diese mal demokratisch abgesicherten barbarei sind....|

*இம் முறை ஜனநாயகம் பச்சை துரோகமாக தன்னைக் காத்துக் கொள்வதற்கு நாங்கள் எல் லோருமே செயலற்ற சாட்சிகள்; இது, எங்கள் விருப் பம் மாதிரியே தாம்...."*

*கிராஸ் தொடர்ந்து உருகி உருகி உரை நிகழ்த்து கிறார்.*

*எல்லோரும் முகம் கறுக்க அமர்ந்துள்ளார்கள்.*

*ஆயினும் பசுமைக் கட்சியின்* (Die Grunen) *உறுப்பினர்கள் முகம் மலர கைதட்டியபடி.*

*விழா நிறைவுறுகிறது;*

*பரிசு பெறுகிறார் திரு.*Yasar Kemal, .

*மறுநாள் விடிகிறது.*

*கிராஸ் கடுமையாக விமர்சனத்துக்குள்ளாகிறார்.*

*அரசியல்வாதிகள் அவரை வாயாடியென்கிறார்கள்.*

*30.10.97 க்கான* "BUNTE" *சஞ்சிகையில் அரசியல் வாதிகள்; இலக்கியவாதிகள் பேட்டியளித்து கிராஸை விமர்சிக்கிறார்கள்.*

CDU *(கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சி) கட்சியின் செயலாளர் திரு. பீட்டர் கின்ஸ்* (PETER HINTZE) *கூறுகிறார்.* "Gunter GRASS Weib nicht, wovon er redet"

*குன்ரர் கிராஸூக்கு எங்குதான் பேசுகிறேன் என்று தெரியவேயில்லை. என்கிறார்.*

Die Grunen go Bundnis *(பசுமைக் கட்சி) சேர்ந்த கைட றுகெல* (Heide Ruhle) *என்ற பெண் கூறுகிறார்.*

"Intellektuelle wie GRASS sind wichtig Fur unsere Demokratie."

*"கிராசைப் போன்ற புத்திஜீவிகள் இருப்பது, எங்கள் ஜனநாயக அரசியலுக்கு மிகவும் முக்கியமா னது." என்கிறார்.*


*ஆனால் கூட்டரசில் அங்கம் வகிக்கும்* FDR *(சுதந்திர ஜனநாயகக் கட்சி) கட்சியின் பொதுச் செயளர் திரு. கைடே வெஸ்டர்வெல* (Guido Westerwelle) ich hatte die GRASS Auberungen (Aussernngen) Fur MASSLOS" *"குன்ரர் கிராஸ் வரைமுறையற்ற வகையில் தன்னுரையை வெளிப்ப டுத்தியுள்ளார்." என்று கொதிக்கின்றார்.*

*இங்கு, இடதுசாரி பசுமைக் கட்சியைத் தவிர மற்றவர்கள் கிராஸைக் கண்டிக்கிறார்கள்.*

*இவர்களைவிட இலக்கியவாதியான திரு. கெல் முத் கறாசெக்* (Hellmuth Karasek) *ஒரு வகை மாதிரியான விமர்சனம் வைக்கிறார்:*

*"நிச்சயமாக திரு. கிராஸ் அவர்களுக்குத் தன் கருத்தை வெளிப்படுத்துவதற்கு உரிமையுண்டு; ஏனெனில் ஒவ்வொரு குடிமக்களும் தனது கருத்தைச் சுதந்திரமாகச் சொல்லவேண்டும். அவ்வண்ணமே,* CDU *கட்சியின் செயலருக்கும் உரிமை உண்டு. கிராஸை விமர்சித்து கருத்தைச் சொல்வதற்கு வெளிப்படுத்துவதற்கு என்கிறார்.*

ப.வி.சிறீரங்கன்.



# கேட்டோம் சொன்னார்கள்

## திரைப்பட நடிகரும் விஞ்ஞான எழுத்தாளருமான டாக்டர். க.இந்திரகுமார் அவர்களை இலண்டனில் சந்தித்த போது....

**கேள்வி:**

தாங்கள் எழுதிய "விண்வெளியில் வீரகாவியங்கள்" என்ற நூலுக்கு தமிழ்நாடு அரசின் விருது வழங்கப்பட்டுள்ளது. அறிவியல் துறையிலான முதலாவது பரிசு உங்கள் நூலுக்கு கிடைத்துள்ளது பற்றி உங்கள் மன உணர்வுகளை எங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளமுடியுமா?

**பதில்:**

இந்தப் பரிசு எனக்கு மிகுந்த மனநிறைவைத் தந்தது. இந்த நூலை சில ஆண்டுகளுக்கு முன் "தினகரன் வாரமஞ்சரியில்" தொடர் கட்டுரையாக வாராவாரம் லண்டனிலிருந்து எழுதினேன். இந்த நூலை எழுதவேண்டுமென்று சில காலமாகவே திட்டமிட்டு இருந்தபோதும், வேலைப்பளு காரணமாக எழுதமுடியவில்லை. அன்றைய தினகரன் ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதனுடன் லண்டனிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நான் எழுதத் திட்டமிட்ட நூலின் சாராம்சாரத்தை அவருக்கு விளக்கினேன். நூலை லண்டனிலிருந்து வாராவாரம் ஒரு அத்தியாயம் எழுதி, படங்களையும் விளக்கக் குறிப்புகளையும் விமானத் தபால் மூலம் அனுப்புவதாக உறுதி கூறி, அதை வாரமஞ்சரியில் தொடர் கட்டுரையாக வெளியிடமுடியுமா என்று கேட்டேன். கட்டுரைத் தொடர் என்று வர ஆரம்பித்துவிட்டால் எப்படியாவது வாராவாரம் நேரத்தை ஒதுக்கி எழுதுவதற்கு அது ஒரு உந்து சக்தியாக எனக்கு அமையும் என்று விளக்கினேன்.



கலைஞரிடம் விருது பெறும் காட்சி

இது ஒரு ஆபத்தான சங்கதி. வாராவாரம் கட்டுரைகள் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து தபால் மூலம் வரப் போகின்றன. ஒரு கட்டுரை உரிய காலத்தில் வந்து சேராவிட்டால் எழுத்தாளருக்கும் அழகல்ல ஆசிரியருக்கும் அழகல்ல. முழுக் கட்டுரைத் தொடரும் தனது கைவசம் இல்லாமல் ஒரு கட்டுரைத் தொடருக்கு பொதுவாக ஒரு பத்திரிகை ஆசிரியர் சம்மதிக்கமாட்டார். எனினும், நல்ல ஒரு முயற்சிக்காக துணிச்சலான முடிவு எடுக்கக்கூடியவர் சிவகுருநாதன் என்று எனது மனம் சொன்னது.

நான் நம்பியபடி சிவகுருநாதன் பச்சைக்கொடி காட்டினார். தொடர் ஆரம்பமானது. வாராவாரம் எழுதித் தபாலில் சேர்த்தே எழுத்துப் பிரதிகளின் நகலை பத்திரமாக வைத்துக் கொள்வேன்.



கட்டுரை அச்சுக்குப் போக வேண்டிய தேதியன்று, வாராவாரம் சிவகுருநாதனுக்கு லண்டனிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு கட்டுரை வந்து சேர்ந்ததா என்று விசாரிப்பேன். கிடைக்கவில்லை என்றால் உடனடியாக அதனை தொலைநகல் மூலம் கொழும்புக்குக்கு அனுப்பிவைப்பேன்.

தொடர் நிறைவெய்தும் வேளையில் தினகரனில் வாராவாரம் வந்த பக்கங்களை சென்னைக்கு எடுத்துச் சென்று மணிமேகலைப் பிரசுரத்தின் அதிபர் ரவி தமிழ்வாணனிடம் காட்டினேன். ரவியினுடைய அப்பா, காலஞ்சென்ற தமிழ்வாணன் அவர்களின் எழுத்துக்களால் 1957 முதல் கவரப்பட்டவன் நான். எழுத்துத் துறைக்கு என்னை அறிமுகப்படுத்தி ஊக்குவித்தது காலஞ்சென்ற எனது தந்தை பொன்னையா கதிரவேலு என்றால், ஒரு எழுத்தாளனுக்கு சக்தி வாய்ந்த ஆயுதமாகப் பயன்படக்கூடிய துணிச்சலை எனக்கு ஊட்டியது தமிழ்வாணனின் எழுத்தாற்றல் தான்.

ரவியைச் சந்தித்து பத்து நிமிடங்கள் தான் ஆகியிருக்கும். "இதோ வருகிறேன்" என்று சொல்லி உள்ளே சென்றார். இரு நிமிடங்களில் திரும்பி வந்தார். அவரது கையில் தமிழ்வாணனும் நானும் 39 வருடங்களுக்கு முன்னர் சேர்ந்து எடுத்து கல்கண்டில் பிரசுரமான அந்தப் படம் இருந்தது. நான் அசந்துபோய் விட்டேன்! தமிழ் நாட்டிலேயே மாதாமாதம் மிக அதிகமான நூல்களை வெளியிடும் பிரசுரகர்த்தாக்களாக மணிமேகலைப் பிரசுரம் கொடிகட்டிப் பறக்கும் சாதனையின் இரகசியம் எனக்குப் புரிந்தது. என்னுடைய

நூல் தமிழ்நாடு அரசின் விருது பெறும் தகுதியுள்ள நூல் என்று ரவி அன்றே சொன்னார். அதிகரித்த நீள அகலத்தில், தரமான கடதாசியில், வர்ண அட்டையுடன் பிரசுரிக்கப் போவதாக உறுதி தந்தார்.

எனது நூலுக்கு தமிழ்நாடு அரசின் முதல் பரிசு கிடைத்த செய்தி எட்டியவுடனே எனது மனம் நெகிழ்ந்தது. இந்த நிலையை நான் அடைவதற்கு ஏணிப்படிகளாக அமைந்த எனது தந்தை, தமிழ்வாணன், சிவகுருநாதன், ரவி தமிழ்வாணன் ஆகியோரை நினைத்து உருகினேன். அவர்களுக்கு ஆயிரம் தடவைகள் எனது மனதில் நன்றி கூறினேன்.

இந்தப் பரிசு எனக்கு மிகுந்த பெருமையைத் தந்ததற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. நான் இலங்கையில் எழுதி வெளியிட்ட "மண்ணில் இருந்து விண்ணுக்கு" என்ற நூலுக்கு இலங்கை அரசின் சாஹித்தியப் பரிசு 1974–ல் கிடைத்தது. அன்றிலிருந்தே தமிழ்நாட்டிலும் விண்வெளி ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட ஒரு நூலை எழுதிப் பிரசுரித்து அரச பரிசு பெற வேண்டும் என்ற இலட்சியத்தை எனது மனதில் வரித்துக் கொண்டேன். இலங்கையில் "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டியவன் நானல்ல என்று நிரூபிக்க வேண்டும்" என்ற அவா ஒருபுறம். முன்கூட்டியே வரித்த இலட்சியங்கள், குறிக்கோள்கள் நிறைவேறும்போது மனம் உணர்ச்சிப் பிளம்பாவது இயல்பு தானே?

"புத்தம் புதிய கலைகள்– பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்; மெத்த வளருது மேற்கே – அந்த மேன்மைக் கலைகள் தமிழில் இல்லை. சொல்லவும் கூடுவதில்லை. அவை சொல்லும் திறமை தமிழ்மொழிக்கு இல்லை. மெல்லத் தமிழினிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்" என்றந்தப் பேதை உரைத்தான்– ஆ! இந்த வசை எனக்கு எய்திடலாமோ? சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்!"

இது பாரதி விடுத்த எச்சரிக்கை. இதுதான் என்னை "அறிவியல் தமிழ்" என்ற துறையை எனது பிரதம மேய்ச்சல் நிலமாகத் தேர்ந்தெடுக்கத் தூண்டியது

**கேள்வி:**

தங்களது "புதுயுகம் கண்டேன்" சோவியத் யூனியனுக்கான பயணக் கட்டுரை சோவியத் யூனியனின் உடைவிற்குப் பின்னர் உங்கள் நூல் பற்றிய உங்களது கருத்துக்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?

**பதில்:**

உலகில் முதல்முறையாக சமதர்மக் கோட்பாட்டை முன் வைத்தவர் திருவள்ளுவர். உலகில் எப்பகுதியிலும் மக்களாட்சி மலர்வதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர், மன்னர் ஆட்சியின் கீழேயே சமதர்மக் கோட்பாட்டை முன் வைத்தது திருக்குறள்தான்.

"கொடை அளி செங்கோல் குடிஓம்பல் நான்கும் உடையானாம் வேந்தர்க்கு ஒளி."

இந்தக் குறள் கூறுவது என்ன? வேந்தர்களுக்கு எல்லாம் ஒளியாக இருக்கக்கூடிய ஒரு வேந்தன் எப்படி ஆட்சி நடத்தவேண்டும்? அவன் வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுக்கவேண்டும். அவன் குடிகள் யாவர்க்கும் முகம் மலர்ந்து இனியன கூறவேண்டும். அவன் வறுமை நீங்கிய, சாதிப் பாகுபாடற்ற ஆட்சி நடத்தவேண்டும்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை"

இந்தக் குறள் கூறுவது என்ன? ஒரு அரசன் ஒழுங்காக ஆட்சி நடத்தாததால் துன்பமடைந்து, அவனது சாதாரண குடிமக்கள் சிந்துகின்ற கண்ணீரே அந்த அரசனது செல்வத்தைக் கரைக்கும் கருவியாக அமையும்.


"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்."

இந்தக் குறளுக்கு அர்த்தம் கூறத் தேவையில்லை.

மார்க்ஸ்– எங்கெல்ஸ்– லெனின் ஆகியோரின் கோட்பாடுகளை எல்லாம், ஆறே ஆறு வரிகளில் இந்தத் திருக்குறள் வெண்பாக்கள் சுருக்கித் தரவில்லையா?

சமதர்மத்தில் உலகுக்கு முன்னோடி தமிழனே!

சோவியத் ஜூனியனின் உடைவினால் திருக்குறள் மீது உள்ள



"விண்வெளி ஆராய்ச்சி" பற்றிய எழுத்தாளராக டாக்டர் இந்திரகுமார் ஆற்றிய அரும்பணிகளைப் பாராட்டி சோவியத் நாட்டுத் தூதர் பரிசளிக்கும் காட்சி

அபிமானம் தமிழனுக்குக் குறையவில்லையே!

அப்படியிருக்க "புதுயுகம் கண்டேன்" என்ற நூலில் நான் வெளிப்படுத்திய சமதர்மக் கருத்துக்களில் மாற்றம் ஏற்படுவானேன்?

உலகில் மனித இனம் வாழும் வரை அந்த இனத்திற்கு மிக உகந்தது சமதர்ம நெறியே என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

சமதர்ம நெறி அழியக்கூடாது; அழியாது. உலகில் மனித இனம் அழியும்வரை சமதர்ம நெறிக்கும் அழிவில்லை.

**கேள்வி:**

எழுத்துத் துறையில் மட்டுமல்ல திரைப்பட்த் துறையிலும் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள். இந்திய இலங்கை கூட்டுத் தயாரிப்பு முயற்சி ஒன்றிலும் ஈடுபட்டிருந்தீர்கள். இம்முயற்சிகளை ஐரோப்பிய மண்ணில் தொடர்ந்திருக்கலாமே?



**பதில்:**

நிச்சயமாகத் தொடர்ந்திருக்க லாம். ஆனால் பணம் முதலீடு செய்வது யார்? இலங்கையிலும் சரி, ஐரோப்பிய நாடுகளிலும் சரி, படத் தயாரிப்பு பற்றி சரியான இலட்சியங்களை, கொள்கைகளை, அணுகுமுறைகளை வைத்திருப்ப வர்களுக்கு சரியான பணமுதலீட் டாளர்கள், தயாரிப்பாளர்கள் கிடைப்பதில்லை. தமக்கு ஒரு திரைப்படம் தயாரிப்பதற்கு துறை தோய்ந்த அனுபவம், சிறப்புக்கள், தகைமைகள், அணுகு முறைகள் உண்டோ இல்லையோ தெது சுய விளம்பரத்துக்காக படம் தயா ரிப்பவர்களுக்கே பணமுதலீட் டாளர்களை மடக்கிப் பிடிப்பதற்



மூன்று முடிச்சு படப்பிடிப்பில் இயக்குனர் கே.பாலச்சந்தர் அவர்களைச் சந்தித்த போது

குரிய சாமர்த்தியம் இருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது எப்படி?

சுய விளம்பரம் கருதாத பொது ஸ்பாதனங்கள் ஐரோப்பிய படத் தயாரிப்பு முயற்சிகளை முன்நின்று தலைமை நடத்த வேண்டும். அதற் குரிய நடிக நடிகைகளை நெறியாள் கைக் கலைஞர்களை, தொழில்நுட் பக் கலைஞர்களை திறமை இலட் சியம் அனுபவ ரீதியில் தேர்ந் தெடுக்க வேண்டும்.

**கேள்வி:**

புலம் பெயர்ந்தோரிடையே பல வீடியோப் படங்கள் வெளி யாகி உள்ளன. அதில் தற்போது ஓர் மந்த நிலை காணப்படுகிறது. உங்கள் அனுபவங்களின் அடிப்ப டையில் புலம் பெயர்ந்தோர் சினிமாகில் கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றிக் கூற முடியுமா?

**பதில்:**

கடைசியாகக் கேட்ட கேள் விக்கு அளித்த பதில்கள் இந்தக் கேள்விக்கும் பெரிதும் பொருந் தும். இதைவிட இன்னொரு முக் கிய விஷயமும் உள்ளது. தற்போது லண்டனில் கைவிரல் விட்டு எண் ணக்கூடிய சிலரே தமிழ்நாட்டுத் திரைப்படங்களை வரவழைத்து இங்கு சினிமா தியேட்டர்களில் காட்டுகிறார்கள். இந்தப் படங்க ளின் தமிழகப் பிரதேசவாரியான விற்பனை விலையைவிடப் பன்ம டங்கு அதிகமான அதீத விலைக ளைக் கொடுத்து இந்த விநியோ கஸ்தர்கள் இந்தப் படங்களை பெற்றுக் கொள்கிறார்கள். சிலர் பணம் சம்பாதிக்கிறார்கள். பலர் இருந்த இடம் தெரியாமல் போகி றார்கள். பரிதாபத்திற்குரிய செய்தி என்னவென்றால் இந்த விநியோ கஸ்தர்கள் அனைவரும் ஈழத்தைச் சேர்ந்தவர்களே. இவர்கள் சமூகப் பிரக்ஞையுடன், சரியான அணுகு முறையுடன் ஐரோப்பிய தமிழ்ப் படத்துறையை ஆதரிக்க முன்வர வேண்டும்.

**கேள்வி:**

நீங்கள் பணியாற்றிய காலத்து ஈழத்து திரைப்படத் துறைக்கும் இன்றைய தமிழீழத்தின் குறும் படங்களுக்கும் இடையே உங்க ளால் அனுமானிக்கக்கூடிய வேறு பாடுகள் உண்டா?

**பதில்:**

நிறைய உண்டு?

திரைப்படங்களை மூன்று தரங் களாக நான் பிரிக்க விரும்புகிறேன்.

அடிப்படைத்தரத் திரைப்ப டங்கள் மனித வாழ்வின் யதார்த் தங்களைப் பிரதிபலிக்காதவை. இவை மனித வாழ்வின் கஷ்டங் களை, துக்கங்களை, சோதனை களை அறவே புறக்கணித்து அதீத கற்பனை உலகில் மகிழ்ச்சிகரமான கனவுலகில் சஞ்சரிக்க வழிவகுப் பவை இவை. தற்போது தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் திரைப் படங்களில் 90 சதவீதமானவை இந்தப் பிரிவைச் சார்ந்தவை.

மத்தியதரத் திரைப்படங்கள் மனித வாழ்வின் யதார்த்தங்களை பிரதிபலிப்பவை. அதீத, சோகம், ஏமாற்றம் என்பனவற்றிற்கு உட் பட்டதே சராசரி மனித வாழ்வு என்று இவை கூறிநிற்கின்றன. இந்த அதர்மத்தை ஒழித்துக் கட்டு வதற்கு வழியேதும் கூறுவதில்லை இந்த ரகத் திரைப்படங்கள்.

நான் பங்கு பற்றிய காலத்து ஈழத்து திரைப்படங்களில் 95 சத வீதமானவை அடிப்படைத் தரத் திரைப்படங்களே. நான் நடித்த "வாடைக்காற்று" ஒரு மத்தியதரத் திரைப்படம். அதனால் பெருவெற்றி அடைந்தது. இன்றைய தமிழீழத் தின் குறும்படங்கள் உயர்ந்தரகத் திரைப்படங்கள் பிரிவைச் சேர்ந் தவை. இவற்றைப் பார்க்கும்போது, இரண்டாவது உலக யுத்தத்தை அடுத்து சோவியத் யூனியனில் இருந்து பெருவாரியாக வெளி வந்த "தேசபக்த யுத்தத்தை" அடிப் படையாகக் கொண்ட சமூகப் பிரக்ஞை கொண்ட திரைப்படங் களின் சிறந்த வாடையே அடிக்கி றது. அதிலும் குறிப்பாக "காற்று வெளி" என்ற படம் சர்வதேசப் பரிசு பெறும் தரத்தில் உள்ளது. கதை பாத்திரப் படைப்பு, பாத்தி ரத் தேர்வு, நடிப்பு, பாடல்கள், படப்பிடிப்பு, படத் தொகுப்பு, மீள் ஒலி அமைப்பு, நெறியாள்கை என்பன சர்வதேசத் தரத்தில் உள்ளன. ஒலி அமைப்பு மட்டுமே



"வாடைக்காற்று" படத்தில் கே.எஸ்.பாலச்சந்திரன், ஆனந்தராணியுடன்

சிறிதளவு தரம் குறைந்துள்ளது.

"சின்ன விழிகள்", "வீர சீலம்" ஆகிய படங்களும் பிரமாதமாக உள்ளன. தென்னிந்தியத் திரைப் படங்களைப் பின்பற்றாமல் புதியதோர் பாணி படைத்து நாம் எங்கோ போய்விட்டோம். பெருமைக்குரிய சாதனைகள் இவை.

**கேள்வி:**

நீங்கள் மட்டுமல்ல உங்கள் குடும்பமும் கலைப் பணியில் ஈடுபட்டுள்ளதை அறிகிறோம். ஐரோப்பிய மண்ணில் உங்களது கலை வாழ்க்கை பற்றிக் கூறுங்களேன்?

**பதில்:**

இலங்கையில் ஆரம்பித்த கலை இலக்கியப் பணிகளை நானும் எனது மனைவி விஜயாம்பிகையும் தொடர்கிறோம். இது எமக்கு மிகுந்த ஆத்ம திருப்தியை தருகிறது. நடனத்துறைக்கு ஆற்றிய சேவைகளை மதித்து அவருக்கு ஒரு அமெரிக்கப் பல்கலைக்கழகம் பரதநாட்டியத் துறையில் "கௌரவ கலாநிதி" பட்டம் வழங்கியுள்ளது. வீயன்னாவில் உள்ள ஆஸ்திரியப் பல்கலைக்கழகம் நடனத்துறையில் அவரது சிருஷ்டிப் படைப்புக்களை Social Anthropology துறைக்குரிய பாடத்திட்டத்தில் சேர்த்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் அவரது நடனத்துறை வெள்ளி விழாவை மதுரைத் தமிழிசைச் சங்கம் விழாவெடுத்துக் கொண்டாடியது.

நடனத்தை வெறும் உடற்பயிற்சியாக மற்றும் கருதாது, தரமான முறையில் கற்று எமது கலைகளின் புகழை உலகனைத்தும் பரப்ப விரும்பும் எவருக்கும் எமது கதவுகள் என்றும் திறந்துள்ளன.



"வாடைக்காற்று" படத்தில் ஆனந்தராணியுடன்

**கேள்வி:**

இன்றைய சூழலில் புலம் பெயர்ந்த மக்கள் ஆற்ற வேண்டிய பணிகளின் தன்மை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:**

தங்களது தாயகத்தை அவர்கள் மறக்கக்கூடாது. பொது கலை இலக்கியங்களை அவர்கள் மறக்கக்கூடாது. தாம் புலம் பெயர்ந்த நாடுகளின் விதேசி, தான்தோன்றிக் கலாச்சாரங்களுடன் அவர்கள் சங்கமமாகக் கூடாது. தாம் புலம்பெயர்ந்த நாடுகளின் மரபுகள், கலாசாரங்களை கௌரவிக்கும் அதே வேளையில், தமது சிறப்பான தனித்துவத்தைப் பேணிக் காப்பாற்ற, இந்த இலட்சியங்களைத் தமது வழித் தோன்றல்களுக்கும் ஊட்டுவிக்க திடசங்கற்பம் பூணவேண்டும். எங்களதும் எங்களது சந்ததியினரதும் வாழ்வும் வளமும் என்றாவது ஒரு நாள் எங்கள் வனப்பு மிக்க தாயகத்தில் தான் என்பதை ஒருநாளும் மறக்கக் கூடாது.

***

# கனவு....

மெல்ல மெல்ல என் சுவாசத்தில்
என் அருமை வாசம்– எப்படி?
கேள்வியின் விடைதேடும்
நிமிஷம் கூட வீணென
சுகந்தத்தைத் சுவாசத்துள்
நிரப்பும் வெறியில் நான் – இந்த
வாசத்திற்காய் ஏங்கிய
நாளை எண்ணியவுடன் – இன்னும்
ஆழமாய் இருக்கிறேன் – திடீரென
எனக்குள் வந்தது இந்தக்குளிரில்
ஓ! என் மண்ணில்லையா
அந்நிய மண் தானா?
கனவில் கூட என்மண்
தனி தான் மறுக்க முடியாது.

–சுகந்தி

# ஜவகர்லால் நேரு

ஜவகர்லால் நேரு நோபல் பரிசு பெற்ற சேர்.சி.வி. ராமனுக்கு இந்திய ஜனாதிபதிப் பதவியைக் கொடுக்க விரும்புவதாகக் கடிதமெழுதினார். அந்த யோசனை ராமனுக்கு வேடிக்கையாக இருந்தது. அதை வைத்து நான் என்ன செய்வது என்று கேட்டு மறுகடிதம் எழுதினார்.

சேர்.சி.வி.ராமன் என்ற நூலில் இருந்து



# கலையும் மக்களும்

# பரத நாட்டியம்

அலாரிப்பு ஜதிசுரம், சப்தம், பதவர்ணம், பதம், ஜாவளி, தில்லானா, சுலோகம் விருத்தம் முதலியவை நாட்டிய இசை வகைகளாகும். அஷ்டபதி, தரங்கம், தரு, தேவர் நாமா, கீர்த்தனை முதலியவையும் நாட்டியத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டிய இசையரங்கில் முதலில் ஆடல் திறமையை வெளிப்படுத்தும் நிருத்தமும், அதற்குப் பின் அபிநயத்துடன் கூடிய நிருத்தியமும் கையாளப்படுகின்றன.



**1- அலாரிப்பு:**

எவ்வாறு குரலிசை அரங்குகளில், ஆரம்பத்தில் நிகழ்சிக்கு விறுவிறுப்பு ஏற்படுவதற்காக, களை தோன்றுவதற்காக தானவர்ணம் பாடப்படுகிறதோ, அவ்வாறே நாட்டிய இசை அரங்குகளில் அலாரிப்பு என்ற இசை வகை முதலில் பாடப்படுகிறது; அதற்கு நாட்டியம் ஆடப்படுகிறது. இந்த இசைவடிவத்தில் தாது, ஜதிகளைக் கொண்டிருக்கும். மத்தியம காலத்தில் வேகம் அமைந்திருக்கும். தாளத்துக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. திஸ்ரம், கண்டம், மிஸ்ரம் போன்ற பலவகைத் தாள வகைகள் கையாளப்படுகின்றன.

**2_ ஜதிசுரம்:**

இந்த இசைவகைக்குச் சாகித்தயம் இல்லை; சுரம் மட்டும்தான் உண்டு. சில சமயத்தில், துவக்கத்தில் அல்லது இறுதியில் ஜதிகள் இணைக்கப்பட்டிருக்கும். எனவே இந்த இசை வகைக்கு ஜதிசுரம் என்று பெயர். இந்த இசை வகை மூலமாகவும் தாள நிர்ணயம் ஏற்படுகிறது.

**3- சப்தம்:**

இது சாகித்தியத்துடன் கூடிய இசைவகை. சாகித்தியத்திலுள்ள கருத்துக்கள் நாட்டியம் ஆடுபவர் காட்டும் பலவித அபிநயங்கள் வழியாக மக்களுக்கு விளக்கப்படும். இந்தப் பகுதியில்தான் நிருத்தமும், அபிநயமும் சேர்ந்து காணப்படுகின்றன.



**4- பதவர்ணம்:**

இந்தப் பகுதி வழியாகப் பற்பல நிருத்த வகைகளும், பற்பல அபிநய வகைகளும் நாட்டியம் ஆடுபவரால் காட்டப்படும்.

**5- பதம்:**

இந்தப் பகுதியில் அபிநயத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. நட்டுவனார் ஒரே பகுதியைத் திரும்பத் திரும்ப பாடிக்கொண்டிருக்க, நாட்டியம் ஆடுபவர் அந்தப் பகுதியில் மறைந்துள்ள பற்பல கருத்துக்களைப்



**பகுதி _ 1**

பற்பல அபிநயங்கள் மூலம் வெளிப்படுத்துவதைக் காண்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

**6- ஜாவளி:**

இந்தப் பகுதியும் அபிநயத்திற்கு உரியது என்றாலும், இது மத்தியம காலத்தில் அமைந்திருப்பதால் ஆடுபவர் தம் கால்கள் மூலம் சிறந்த வேலைப்பாடுகளைக் காட்டுவதற்குத் துணை புரிகிறது.

**7- தில்லானா:**

இது ஒரு விறுவிறுப்பான பகுதி. தாளத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. சாகித்தியம் வரும் இடங்களில் அபிநயமும், மற்ற இடங்களில் நிருத்தமும் செய்யப் படும். நட்டுவனார் பல்லவியில் வருகின்ற ஜதிகளைப் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லும் போது, ஆடுபவர் தம் கால்களினால் பலவித அருமையான வேலைப்பாடுகளைச் செய்வதை நாம் கண்டுகளிக்க முடிகிறது.

**8- சுலோகம், விருத்தம், பத்யம்** ஆகியவை தாளக்கட்டுப் பாடு இல்லாத இசைப்பகுதியைச் சேர்ந்தவை. இவற்றிற்கு அபிநயமும் தாளமின்றியே காட்டப்படும். ஓர் இராகத்தில் அல்லது பல இராகங்களில் சுலோகம் அல்லது விருத்தம் அல்லது பத்யம் பாடப் படும்.

அஷ்டபதிகள், தரங்கங்கள், தருக்கள், தேவர்நாமாக்கள், கீர்த்தனைகள் முதலியவையும் சில சமயத்தில் தேசியப்பாடல்களும் நாட்டியத்துக்குப் பயன்படுத்தப் படுகின்றன. நாட்டிய நிகழ்ச்சியின் முடிவில் பாம்பு நடனம், குறத்தி நடனம், மயில் நடனம், போன்ற பலவகை நடனங்கள் இடம்பெறுகின்றன.

நாட்டிய நிகழ்ச்சியின் துவக்கத்தில், சில இடங்களில் "தோடைய மங்களம்" என்ற இசைவகையும் பாடப்படுகிறது.

**- பைரவி**

# நூலும் நுகர்வும்




நூல் :முகமூடிகளும் வியாபாரிகளும் [ கட்டுரைகள் ]
ஆசிரியர்: சுரேஸ் ஆர்.சீனிவாசன்
வெளியீடு: பைந்தமிழ்ப் பதிப்பகம்

இந்நூல் வெளியீட்டிற்குத் தூண்டுகோலாய் அமைந்தன இரண்டு பெரும் இழப்புக்கள். ஒன்று "மன ஓசை" ஏட்டின் மரணம். இரண்டு அந்த ஏட்டின் மரணத்தைத் தடுக்க முயன்ற தோழர் சுரேஸின் மரணம் என்ற அறிமுகத்துடன் இந் நூல் தனது பக்கங்களை ஆரம்பிக்கிறது. நூலின் ஆசிரியர் தமிழக அரசு கலைக்கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தமது 43–வது வயதில் இருதய நோயினால் மரணடைந்திருக்கிறார். அவரால் எழுதப்பட்ட கட்டுரைகளே தொகுப்பாக வெளிவந்துள்ளன. இதுவரை உருவாக்கப்பட்டிருக்கும் பிரபலமான கருத்துக்கள் மீதும் பிரபலமான பலரின் மீதும் பலகோணங்களில் கேள்விகளை முன்வைப்பதாய் உள்ளது இத் தொகுப்பு.

ஜோன் எப் கெனடி, பட்டுக்கோட்டையார், டாக்டர் எம்.எஸ் உதயமூர்த்தி இன்னும் பலர் பற்றி இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டுரைக்கும் உரிய ஆதாரங்கள் பின்னிணைப்பாகக் காணப்படுகிறது.

பெண்களுக்கு

# டாக்டர் பதில்கள்

**கேள்வி:**

எனக்குத் திருமணம் ஆகி, ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. எனது முக்கியமான பிரச்சினை குழந்தை இன்மை. அத்துடன் வேறு சில உடற் கோளாறுகளும் இருப்பதாக நினைக்கிறேன். அதாவது நான் வயதிற்கு வந்து மூன்று அல்லது நான்கு ஆண்டுகளே மாதவிலக்கு ஒழுங்காக வந்து. அதன் பிறகு 40 நாள், 50 ,நாள், 60 நாள் அல்லது மூன்று மாதம்கூட கழித்து வருகின்றது. மேலும் இப்போதெல்லாம் மாதவிலக்கு வருவதற்கு 15 நாள் முன்பிருந்தே உடம்பெல்லாம் அதிக வலி. இரண்டு தொடைகளிலும் மார்பிலும் ஏகமாய் வலிக்கிறது. நிவாரணம் கூறுங்கள்?

**பதில்:**

மாதவிலக்கு சரியான இடைவெளிகளில் ஏற்படாததற்கு காரணம் ஹோர்மோன்களின் அளவில் வித்தியாசம் ஏற்படுவதே. மாதவிடாய் சரியாக ஏற்பட மாத்திரைகள் மருத்துவரின் மேற்பார்வையின் கீழ் உட்கொள்ளலாம். மார்பக வலி மாத விடாய்க்கு முன் ஏற்படுவது பற்றி பயம் கொள்ளத் தேவையில்லை.

மார்பகத்தில் கட்டி ஏதும் இல்லையென்றால் புற்றுநோய் பயம் கொள்ளத் தேவையில்லை.

**கேள்வி:**

என்னுடைய வயது 25. திருமணம் முடிந்து 1 1/2 வருடம் ஆகின்றது. முதலில் ஒரு கருச்சிதைவு ஏற்பட்டது. பின்னர் குழந்தை நல்லமுறையில் பிறந்து 2 நாட்களில் இறந்துவிட்டது. அது பிறக்கும் பொழுதே தோலின் நிறமானது நீலமாக இருந்தது. அடிக்கடி அழும்பொழுது மூச்சைப் பிடித்து அழும். நிறமும் மாறிவிடும். டாக்டரிடம் கேட்டதற்கு காரணம் கூறவில்லை. தயவு செய்து எதனால் இப்படி ஏற்படுகிறது என்று கூறினால் அடுத்த குழந்தைக்காவது அது வராமல் தடுக்க முடியும். அதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்றும் கூறுங்கள்?

**பதில்:**

பெரும்பாலும் இதுபோன்ற நிலை குழந்தையின் இதயத்தில் குறைபாடு இருந்தால் ஏற்படும். நெருங்கிய உறவினர்களைத் திருமணம் செய்து கொண்டால் பிறவிக் குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறக்கும் வாய்ப்பு அதிகம்.

இதைத் தடுப்பதற்கு வழி இல்லை. எனினும் கணவன் மனைவி இருவர் இரத்தத்தையும் பரிசோதனை செய்து 'சிபிலிஸ்' நோய் உள்ளதா எனக் கண்டறியவும் சிபிலிஸ் நோய் இருந்தாலும், கர்ப்ப காலத்தில் கர்ப்பத்தைப் பாதிக்கக் கூடிய மருந்துகளை உட்கொண்டாலும் குழந்தைக்குப் பிறவிக் குறைபாடு ஏற்பட வாய்ப்புண்டு.

**கேள்வி:**

எனக்கு வயது 22. விரைவில் திருமணம் நடக்கப்போகிறது. முகம் வறட்சியாகவும், நிறையப் பருக்களும் தோன்றிவிட்டன. இதற்கு என்ன நிவாரணம்.

**பதில்:**

முகம் வறட்சியாக இருப்பதைத் தடுக்க வைத்தியரின் ஆலோசனைப்படி முகக்கிறீம்களை முகத்தில் தடவிக் கொள்ளலாம். முகத்தை அடிக்கடி சோப்புப் போட்டு கழுவவேண்டாம். வறட்சி அதிகமாகும். அத்துடன் குளிர் தண்ணியில் முகத்தைக் கழுவிவரவும். திடீரெனத் தோன்றும் சருமக் கோளாறுகளுக்கு Skin Specialist ஒருவரின் ஆலைசனை பெறுக.

மணப் பெண்ணாகப் போகிறவராக இருப்பதால் உடனே செல்லவும்.

**கேள்வி:**

எனக்கு வயது 22. திருமணமாகிவிட்டது. நான் 18 வயதில் ஒரு அபார்ஷன் செய்துவிட்டேன். [முதல் குழந்தை]

தற்போது எல்லோரும் முதலில் உண்டாகிய குழந்தையை அபார்ஷன் செய்துவிட்டதால் குழந்தை பிறப்பது கஷ்டம் என்று பயமுறுத்துகிறார்கள். மீண்டும் எனக்குக் குழந்தை பிறக்குமா பிறக்காதா?

**பதில்:**

கருக்கலைப்பு செய்துகொண்டால் குழந்தைகள் பின்பு பிறக்காதென்பது தவறு.

கருக்கலைப்பு செய்யும் போது (Infection) ஏற்பட்டால் கருவழிக்குழாய் (Tube Block) அடைப்பு ஏற்படலாம். இதைப் பரிசோதனை செய்தால் தெரிந்துவிடும்.

எனவே இதைப்பற்றி பயம் தேவைஇல்லை. கருத்தரிக்கவில்லையென்றால் மருத்துவரைக் கலந்தாலோசிக்கவும்.

# சமைப்போம் சுவைப்போம்

## மட்டன் பிரியாணி

**தேவையான பொருட்கள்:**

இறைச்சி - 1 கிலோ (ஆடு)
புரியாணி அரிசி - 3/4 கிலோ
கேசரிப்பவுடர் - சிறிதளவு
ஏலக்காய் - 6
பன்னீர் - 1 சூப் கரண்டி
பெருஞ்சீரகம் - சிறிதளவு
ஜாதிக்காய் - 1/2 கரண்டி
கராம்பு - சிறிதளவு
கறுவா - சிறிதளவு
பூண்டு - சிறிதளவு
இஞ்சி - ஒரு துண்டு
வெங்காயம் - இரண்டு
தக்காளி - 2
புதினா
கொத்தமல்லி - சிறிதளவு
பச்சைமிளகாய் - 4
உப்பு - சிறிதளவு
மிளகு தூள் - 1/2 கரண்டி
சீரகத்தூள் - 1/2 கரண்டி

**செய்முறை:**

இறைச்சியை துண்டுதுண்டாக அரிந்துவிட்டு பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணைவிட்டு வெங்காயத்தை நீளமாக அரிந்து அதற்குள் இடவும். பெருஞ்சீரகத்தையும், ஜாதிக்காயையும் நன்றாக அரைத்து, கராம்பு, கறுவா முழு தாகவும், பூண்டு, இஞ்சியை நன்றாக அரைத்தும் பாத்திரத்தினுள் இட்டு பொரிக்கவேண்டும். பின்பு தக்காளியையும், பச்சை மிளகாயையும்,முந்திரிப் பருப்பையும் போட்டு சில நிமிடங்களில் மிளகுதூள், சீரகத்தூளை இட்டு அடிப்பிடிக் காமல் கிளறவும். இறைச்சியை அதற்குள் போட்டு சூட்டைக் குறைத்து 1 டம்ளர் தண்ணீர் விடவும்.

கேசரிப் பவுடரை தண்ணீரில்விட்டு அரிசியை 4,5 முறை கழுவவேண்டும். உப்புபோட்டு ஏலக்காயையும் போட்டு 3/4 பதத்திற்கு அரிசியை வேகவைக்க வேண்டும்.

முதலில் தயாரித்த கறிக்குள் சோற்றை, புதினா கொத்தமல்லியைப் போட்டு 10 நிமிடம் மூடிவைத்துவிடவும். பரிமாறமுன்னர் பன்னீரை சேர்க்கவும். இறுதியில் தேவையான அளவு நெய்விட்டு இறக்கவும்.

---

## புதிய கண்டுபிடிப்பு நீங்களும் முயன்றுபாருங்கள்

## புலம் பெயர் பிட்டு

முன்னரே சொல்லிவிடுகிறோம் இது பாலம் சமையல் பகுதியின் கண்டுபிடிப்பு. புலம் பெயர்ந்தோர் வாழ்வை நெரிக்கும் நேரப்பற்றாக்குறை அவர்களது பாரம்பரிய உணவுகளான பிட்டு, இடியப்பம் போன்ற உணவு வகைகளை மிகத் தொலைவிற்கு எடுத்துச் சென்றுள்ளது. ஐரோப்பியத் தயாரிப்பான தவிட்டு பாணையே கீலம்கீலமாக வெட்டி பதப்படுத்திய இறைச்சி மரக்கறி போன்றவற்றை மேலாக வைத்து உண்ணப்படுகிறது. ஆனால் பலரால் இதை உண்ண முடிவதில்லை. உடம்பிற்கு ஆரோக்கியமானது என்று கூறப்படும் இப் பாணை நமக்கேற்றால்போல பிட்டாக மாற்றி அமைத்துக் கொள்ள முடியும். தேவையான பொருட்கள்.

500 கிராம் தவிட்டுநிறப்பாண்
100 கிராம் தேங்காய்ப் பூ
சர்க்கரை விரும்பிய அளவு

**செய்முறை:-**

முதலில் பாணை சிறுசிறு தகடுகளாக வெட்டுக. அவற்றைக் கைகளினால் பிட்டின் அளவிற்கு உதிர்த்துக் கொள்ளவும். மிகமிகச் சிறிதளவு நீரை மேலால் தெளித்துவிட்டு, சிறுசிறு துண்டுகளாக்கி வைத்திருக்கும் சர்க்கரைக் கட்டிகளை அத்தோடு கலந்து கொள்ளவும். பின் பிட்டு அவிக்கும் குழலில் சிறுசிறு பகுதிகளாகப் போட்டு, இடையிடையே தேங்காய்ப்பூவும் கலந்து குழல் பிட்டாக அவித்துக் கொள்ளலாம். கறியுடன் சேர்த்து உண்ண விரும்புவோர் சர்க்கரையைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வேலைத்தலத்திற்குக் கொண்டுபோக வேண்டுமா? உதிர்த்திய பாண் கலவையில் சிறு பகுதியை இட்டலித் தட்டில் போடுக. அதில் ஒரளவு பெரிதான சர்க்கரைக் கட்டிகயைப் போட்டு, உதிர்ந்த பாண் கலவையால் மூடி அவிக்க இட்டலி வடிவில் வாய்க்கினிய பிட்டு. இதற்கு புலம் பெயர்பிட்டு எனப் பெயர் வைக்கலாமா? இதுபோல உங்களிடமும் புதிய கண்டுபிடிப்புக்கள் உள்ளனவா?... தவறாது அனுப்பி வையுங்கள்.

## விஞ்ஞான விழுதுகள்

தண்ணீரில் ஐஸ் கட்டி மிதப்பது போல, நீரில் படகு மிதப்பதுபோல, காற்று மண்டலத்தின் மேலே மேகம் மிதக்கிறது. காற்றைவிட அடர்த்தி குறைவான எதுவும் அப்படித்தான் மிதக்கும். Gas பலூன் மேலே பறக்கிறது. எப்படி? அது லேசாக இருப்பதால் தான் இது புவியீர்ப்பு விசைக்கு எதிராக செயல்படுவது போல் இருந்தாலும் அது வளிமண்டலத்தை விட்டு விலகிச் சென்றுவிட முடியாது; பூமியுடன்தான் இருக்க வேண்டும். றொக்கற்றுக்கள் மாதிரி மேகங்கள் விண்வெளியில் பறந்து விடுவதில்லையே. மேகங்கள் நகர்வதற்கான காரணம் காற்றின் அசைவு ஆகும்.

நம் உடலின் வெப்பம் உடலில் நடைபெறும் வளர்சிதை மாற்றத்தினால் உண்டாகிறது. இரத்தோட்டம் வியர்வை முதலியவற்றால் உடல் வெப்பம் சீராக வைக்கப்படுகிறது. நம் உடலில் நோய் கிருமிகள் நுழைந்ததும் அதை எதிர்த்து போராடுவதற்காக நம் உடலின் வளர்சிதை மாற்றம் கொஞ்சம் துரிதப்படுகிறது. இதனால் உடல் வெப்பம் உயர்கின்றது. இதை காய்ச்சல் என்கிறோம்.

## சில நாட்டின் தேசியப் பறவைகள்

இலங்கை - காட்டுக்கோழி
இந்தியா - மயில்
அமெரிக்கா - கழுகு
பிரிட்டன் - ராபின்
அவுஸ்ரேலியா - நெருப்புக்கோழி
ஜேர்மனி - வெள்ளைக் கொக்கு

## விந்தை உலகிலே

ஜேர்மனி நாட்டில் ஜேனா என்ற இடத்தில் 1815-ம் ஆண்டு மாவீரன் நெப்போலியனுடைய போர்களின் முடிவைக் குறிப்பதற்காகவும் உலகில் அமைதி தழைக்க வேண்டும் என்பதற்காகவும் ஒரு ஆலமரம் நடப்பட்டது. இந்த ஆலமரம் பல ஆண்டுகளாக உயிருடன் இருந்து வந்தது. பின்னர் 1914-ம் ஆண்டு ஜேர்மனியில் முதல் உலகப் போர் தொடங்கப்பட்ட ஓகஸ்ட் முதல் தேதியன்று இந்த ஆலமரம் விழுந்துவிட்டது. இதன் தோற்றம் மற்றும் மறைவு குறித்து ஆராய்ந்த பெருமக்கள் அதிசயப்படுகின்றனர். உலக அமைதிக்காக நடப்பட்ட ஆலமரம் அமைதி இழந்து உலப் போர் ஆரம்பமான தினத்தன்று தானாகவே விழுந்துவிட்டது.

## பரிணாம வளர்ச்சி

உமர்கயாமின் படுக்கையிலே ஷயிரா படுத்திருந்தாள்.

ஓவியங்கள் வரையப்பெற்ற கிண்ணத்தில் மதுவை ஊற்றினான் உமர்கயாம்.

நட்சத்திரங்கள் பதிக்கப்பட்ட நீல நிறத்து உடையில் இருந்தாள் ஷயிரா.

அந்தக் காட்சி நீல வானத்து நட்சத்தி ரங்களுக்கிடையே நிலவு பவனி வருவது போல் தோன்றிற்று.

கையில் மதுக் கோப்பையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் உமர்.


சிறிது நேரத்தில் கோப்பை காலியாயிற்று. மீண்டும் ஊற்றிக் கொண்டான்.

அரைகுறை போதையோடு ஷயிராவின் இதழ்களில் அழுத்தமாக முத்தமிட்டான் உமர்.

அவள் கண்களில் கசப்புணர்ச்சி தோன்றிற்று.

# வாய்விட்டுச் சிரிக்க

## சந்தோஷம்



அந்தக் காதலர்கள் ஊரைவிட்டு ஓடிப்போய்விடத் தீர்மானித் தார்கள்.

அன்பே... நாளை இரவு ஒரு மணிக்கு கிழக்கே போகும் ரெயிலில் ஏறி பட்டணம் போய்விடலாம். சரிதானே...

சரியென்று தலையாட்டினாள் காதலி.

சுமார் ஒரு மணிக்கு டென்சனுடன் ரயில்வே நிலையத்தில் காத்திருந்தான் காதலன்.

வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்த காதலி சொன்னாள், டார்லிங்! நாம் ஓடிப்போற விஷயம் எப்படியோ எங்க அப்பா அம்மாவுக்கு தெரிஞ்சுபோச்சு!

ஐயையோ ... எப்படித் தெரியுமாம்...?

அதுதானே புரியல....! நான் ஓடிப்போறதுக்கு வசதியாய் கதவுகளை எல்லாம் திறந்து வைச்சிட்டு விளக்கை அணைச்சிட்டு தூங்கிறமாதிரி எங்க அப்பாவும் அம்மாவும் நடிச்சாங்க. அதை நான் கண்டுபிடிச்சிட்டன். நாம் இப்ப ஓடிப்போக வேண்டாம். ஒருவாரம் போகட்டும்.

ஏன் டியர்...?

ஒரே சமயத்தில ரெண்டு சந்தோஷத்தை எங்க அப்பா தாங்கமாட்டார். எனக்கு அரை மணி நேரத் திற்கு முன்னாடிதான் எங்க அக்காவும் ஒருத்தனைக்கூட்டிக்கிட்டு இதே ரெயிலில் ஓடிப்போறதுக்காக அதோ வந்து நிக்கிறா பாருங்க!

## எந்திரகதி

தங்கள் கம்பனிக்கு புதிதாக ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அந்தக் கம்பியூட்டர் ரோபட்டை ஊழியர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அதன் முகாமையாளர் அந்தக் கம்பியூட்டர் ரோபட்டின் சிறப்புகளை விலாவாரியாக ஊழியர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

அந்த ரோபட், நம் கம்பனிக்கு ஒரு வரப்பிரசாதம்... நாம் எள்ளென முன் எண்ணையாய் நிற்கும் எத்தனை மணிநேரம் வேலை செய்யச் சொன்னாலும் முகம் சுழிக்காமல் வேலை செய்யும். 10 ஊழியர்கள் நாள் முழுக்க செய்யும் வேலையை 10 நிமிஷத்தில் செய்துவிடும்.

எவ்வளவு சிக்கலான கணக்குகளையும் சுலபமாகச் செய்யும். இதற்கு ஓய்வு என்பதே கிடையாது. வயதும் கிடையாது. நூறு வருஷத்திற்குக் கூட நிற்காமல் இயங்கும்.

எந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டாலும் உடனுக்குடன் பதில் சொல்லும்... இந்த ரோபட்டுக்குத் தெரியாத விடயமே இல்லை. 65 கோடி ரூபாய்க்கு வாங்கின ரோபட்டால் செய்முடியாத காரியம் என்று எதுவுமே இல்லை.

இப்போது ஊழியர்கள் யார் வேண்டுமானாலும் என்ன வேலை செய்யவேண்டுமென்று சொன்னாலும் உடனே செய்யும்.

இராமசாமி என்பவர் எழுந்தார். ஐயா! என்ன சொன்னாலும் உடனே செய்யும்தானே?

ஆம்... அதில் என்ன சந்தேகம்...?

இராமசாமி கேட்டார் "எங்கள் அலுவலகத்தில் வேலை செய்யும் யாரிடமாவது ஒரு ஐம்பது ரூபாய் கைமாத்து வாங்கிவரச் சொல்லுங்கள் பார்ப்பம்..."


ரோபட் அமைதியாய் தலையைக் குனிந்து தோல்வியை ஒப்புக் கொண்டு நின்றது.

## சிறுகதை 1

# ஒரு கிழவரும் இரு கிளிகளும்

வெகுநேரமாகத் தங்கராசர் அந்தக் கிளிகளையே பார்த்துக் கொண்டிருந்தார். நேற்றுக் காலையில், அவருடைய மகனும், மனைவியும் மக்களும் வெளியூர் போனதுமே, அவர் அக் கிளிகளை அப்படியே கூண்டோடு மேல்மாடிக்கு, தன்னுடைய அறைக்குக் கொண்டு வந்திருந்தார்.

யாரோ நண்பர்கள் வீட்டுத் திருமணமாம், தங்கராசருக்கு அவர்களைத் தெரியாதுதான். இருந்தாலும் மகனோ, மருமகளோ, 'நீங்களும் வாருங்கோவன்' என ஒரு கதைக்காகவேனும் கேட்டிருக்கலாம். அப்படிக் கேட்டிருந்தால், 'நான் ஏன் புள்ளையள் உந்தத் தூரத்திற்கு!..... ஆக்களையும் எனக்குத் தெரியாது!... அதோடை அஞ்சாறு மணித்தியாலம் காறுக்குள்ளை காலை மடக்கிக் கொண்டிருக்கவும் என்னாலை ஏலாது' என்றுதான் நிச்சயமாகச் சொல்லியிருப்பேன் என, தங்கராசர் இப்போ நினைத்துக் கொண்டார்.



மகனையும், அவனுடைய குடும்பத்தினையும் பார்ப்பதற்கென, இரண்டு வருடங்களுக்கு முன்னர் டென்மார்க்கிற்கு வந்த தங்கராசர் ஏதேதோ காரணங்களுக்காக மகனுடனேயே வசிக்க நேரிட்டது. இந்த இரண்டு ஆண்டுகளுள் இப்படி எத்தனையோ சின்னச் சின்னச் சம்பவங்கள்– இலேசாகச் சுடும் சொற்கள். ஆனால் அவர் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. அவருடைய சுபாவம் அப்படி. ஊரிலும், அவர் பிறருடன் புழங்கியது குறைவு. தன் வாழ்வின் அறுபத்தெட்டு வருடங்களையும் விவசாயியாகவே வாழ்ந்துவிட்டவர். தன் வயலின் பயிரும், தோட்டத்து வாழைகளும்தான் அவருக்கு உற்றமும் சுற்றமும். பயிர் பச்சைகளுடனேயே மானசீகமாக உரையாடி மகிழ்பவர். அவருடைய மனைவி பாக்கியங்கூட அப்படித்தான். ஆனால் கூடவே உலக விவகாரங்களும் தெரிந்தவள். அவளுக்கு மூளைக் காய்ச்சல் வந்து திடீரென இறந்தபோது அவர் திகைத்துத்தான் போனார். திருவிழாவில் தொலைந்து போன குழந்தைபோல ....அப்போதுதான் அவருடைய மகன் டென்மார்க்குக்கு வரும்படி பயணச் சீட்டு அனுப்பயிருந்தான்.

இங்கு வந்தது பிழையோ என்று தங்கராசர் இந்த இரண்டு ஆண்டுகளிலும் அடிக்கடி நினைத்தபோதும், 'நான் திரும்பிப் போகப்போறன்' என்று சொல்ல அவரால் இயலவில்லை. பாக்கியம் இல்லாத வீடும், ஊரும் அவரை அந்த அளவுக்கு ஈர்க்கும் சக்தியாக இருக்கவில்லை. ஆனாலும், அந்தப் பிணைப்பிலிருந்து அறுந்துபோய் இங்கு வந்து, ஏதோ அந்தரத்தில் தவிப்பதுபோன்ற நிலை.

தங்கராசருக்கு பேரப்பிள்ளைகள் அருகில் வாழ்வது ஆறுதலாக இருந்தது. அவர்களைத் தன் மடியில் தூக்கி வைத்திருப்பார். கொஞ்சுவார். ஏதோவெல்லாம் அவர்களைக் கேட்க வேண்டும் என்று ஆசைப்படுவார். ஆனால் அது முடிவதில்லை. பேரனாவது 'அப்பப்பா, இந்தாங்கோ' என்று ஏழெட்டுத் தமிழ்ச் சொற்களாவது பேசுவான். ஆனால் இளையவளான பேத்தியோ அதுவும் இல்லை. முழுக்க டெனிஷ்தான்.

அவர் முன்னே அந்த அழகிய கூண்டிலிருக்கும் சின்னக் கிளிகள் போன்ற, அழகிய இரண்டு பேரக் குழந்தைகள், தங்கராசரைப் பொறுத்தவரையில் இந்தக் கிளிகளின் மொழியும், அவரது பேரக்குழந்தைகளின் பாஷையும் ஒன்றே. மிக இனிமைதான், ஆனால் புரியாது!

முதலாவது குழந்தை பிறந்ததுமே மகனும் மருமகளும் செய்து கொண்ட தீர்மானமே இன்று அவர்களுடைய இரண்டு பிள்ளைகளும் டெனிஸ் மொழியை மட்டுமே பேசுவதற்குக் காரணம் என்பதை வந்து சில நாட்களிலேயே தங்கராசர் உணர்ந்து கொண்டார். தனது மகனும், மருமகளும் தமிழர்கள் மிகக் குறைவாக உள்ளதொரு பட்டணத்தையே வசிப்பதற்குத் தேர்ந்தெடுத்தது, தமது பிள்ளைகள் குழந்தைப்பருவத்திலிருந்தே முழுமையான டெனிஸ் சூழலிலேயே வளர்ந்தால்தான், அவர்கள் எதிர்காலத்தில் இங்குள்ள வாய்ப்புகளை மற்றவருடன் சமமாகவும் முழுமையாகவும் பயன்படுத்தமுடியும் என்று

அவர்கள் நிச்சயமாக நம்புவது சரியா, தவறா என்று சொல்ல, சாதாரண விவசாயியான தங்கராசருக்குத் தெரியவில்லை.


சுற்றுப் புறத்தில் தமிழரே இல்லாத காரணத்தி னாலும், ஆங்கிலமொழிப் பரிச்சியம் சொற்பமும் இல்லாதபடியினாலும், தங்கராசர் இடைசுகம் வெளியே உலவப் போனாலும், அவரால் எவருட னும் பேசவோ, பழகவோ முடியவில்லை. காலை ஏழு மணிக்கே வெறுமையாகிப் போகும் வீடு, மாலை ஆறுமணிக்குத்தான் மறுபடி உயிர்க்கும். அதனால் தனிமை தங்கராசருக்குப் பழகிப்போயிற்று. நாளடைவில் அதுவே அவருக்குப் பிடித்தமாயும் போயிற்று.

தனிமை பிய்த்துத் தின்னும் அந்தப் பகற் பொழுது களில், அவர் கீழே இறங்கி, வரவேற்புக் கூடத்தின் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் கிளிக்கூண் டையே, அமைதியாக உட்கார்ந்து பார்த்துக்கொண் டிருப்பார். கிளிநொச்சியில் இந்த மாதிரிக் கிளிகள் இல்லைத்தான். அவருக்குக் தெரிந்தவரை அங்கு எவர் வீட்டிலும் இல்லை. ஆங்கிலத்தில் லவ்பேட்ஸ் என்பார்களாம். பேரப்பிள்ளைகள் உண்டுலேற் என் பார்கள். பேரன் அவற்றுக்கு வைத்துள்ள பெயர்கள் தங்கராசருக்குத் தெரியும். காயாம்பூப்போல இள நீலக்கிளி ஆண். அதன் பெயர் லாஸ். கதலிவாழைக் குருத்து நிறத்தில் பச்சைகலந்த மஞ்சள் கிளி, பெண். அதற்குப் பெயர் இஸபெல்லா. இரண்டுமே டெனிஸ் பெயர்கள்தானாம். ஆனால் அவையிரண்டும் பேசிக் கொள்ளும் மொழி டெனிஸ் அல்ல என்பது தங்க ராசருக்குத் நிச்சயமாகத் தெரியும்.

எந்த நாய் எங்கு போனாலும், எந்த நாய் எந்த நாட்டில் குட்டி போட்டாலும், அவற்றின் தாய் மொழி எப்போதுமே நாய்மொழிதானே! எதற்காக இந்த மனிதர்கள் மட்டும் இப்படி என்று தங்கரா சரால் வியக்காமல் இருக்க முடியவில்லை. டென் மார்க்கில் உள்ள மைனாக்களும், கிளிநொச்சி மைனாக் கள் மாதிரியே பாடுகின்றனவே! ஏன் காகங்கள்கூட இங்கும் காகா என்றுதானே கத்துகின்றன! என்னு டைய பேரப்பிள்ளைகள் மட்டும் ஏன் இப்படித் தாய் மொழி தெரியாமல்?.......

அதுமட்டுமல்ல... பேரனுக்குப் பெயர் டனுஷன், பேத்திக்குப் பெயர் டனிஷா! தங்கராசர் தனக்கி சைவாக தனு, தனி என்னு சொல்லிக் கொள்ளுவார்.

அந்தக் காதற் கிளிகளைத் தங்கராசர் வைத்தகண் வாங்காமலே பார்த்தவாறிருந்தார். அவற்றின் மொழி தெரியாவிடினும், அவருக்கு அவற்றைப் பார்ப்பதில் தன்னை மறக்கக் கூடியதாயிருந்தது. அவை பெரும் பாலும் ஒன்றையொன்று அணைத்தபடி, கூண்டின் நடுவே இருந்த கிடைக்கம்பியில் உட்கார்ந்திருக்கும். ஒன்றுக்கொன்று உண்ண முயற்சிப்பதுபோலவும் தங்கராசருக்குத் தோன்றும். லாஸ், அதுதான் அந்த ஆண்கிளி, கூண்டினுள் தொங்கவிடப்பட்டிருந்த சின்னஞ்சிறு மணியின் நாக்கைத் தன் அலகால் மெல்லத் தட்டிவிடும். அதிலிருந்து எழும் ஒலி தங்கராசருக்கு கேட்காவிடினும், இஸபெல்லா தன் அழகிய சிறு தலையை நளினமாகச் சாய்த்து விழிகளைப் பாதி மூடி ரசிக்கும்போது, அவ்வொலி மிக இனிமையாகத்தான் இருக்க வேண்டும் எனத் தங்கராசர் நினைத்துக் கொள்வார். இப்படி, அன்னி யோன்னியமாக, பாசமாக இருக்கும் அவை, இருந் தாற்போல் காச்சுமூச்சென கத்திக் கொண்டு, நாலு புறமும் சிறகடித்துப் பறக்க முடியாத அந்தச் சின்னஞ்சிறு கூண்டுக்குள், பறக்க முயற்சித்து, ஒன்றி லொன்று அடிபட்டும், கூண்டுக் கம்பிகளில் மோதி யும் அவஸ்த்தைப்படும்போது தங்கராசரும் தவித்துப் போவார்.



பாதுகாப்பான கூண்டு, அழகான கிண்ணத்தில் பல வகைத் தானியங்கள், தாகத் துக்கு தண்ணீர், இசைகேட்க மணி, இவையெல்லாம் இருக்க பின்பு ஏன்தான் இந் தக் கிளிகள் பறந்தடிக்கின்றன.? குடும்பச் சண் டையா? என்று கலவரப்பட்டவராக தங்கராசர் இருக்கையை விட்டெழுந்து கூண்டருகில் போவார். அவரை அருகில் கண்டதுமே, அவை அவரிடமி ருந்து எவ்வளவு தூரத்துக்குத் தம்மால் விலகமுடி யுமோ அவ்வளவுக்குக் கூண்டின் ஒரு பக்கத்தில் ஒதுங்கி முடங்கிக் கொள்ளும். லாஸ் சிலசமயம் இவருடைய பக்கமே திரும்பாது தலையைச் சிற குக்குள் புதைத்துக் கொள்ளும். அப்போதெல்லாம் தனுவையும், தனியையும், தன்னையும், தன் தனி மையையும் அவரால் நினைக்காமல் இருக்க முடிவ தில்லை.

லாஸையும், இஸபெல்லாவையும் தங்கராசர் தன்னுடைய அறைக்குக் கொண்டு வந்து அங்கிருந்த சிறிய மேசைமீது வைத்தது, தனது படுக்கையில் படுத்திருந்தவாறே அவற்றைப் பார்த்திருக்கத்தான்.

இப்போதெல்லாம் பெரும்பாலும், தனது இந் தச் சிறு அறையிலேயே தரித்திருப்பதுதான் தங்க ராசருக்குப் பழகிப்போன சுகமாக ஆகிவிட்டது. கனதியான மரச்சட்டமிட்ட ஒரு மெத்தைக் கட்டில். அதன் எதிர்ச் சுவரோரமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ஒரு அலுமாரி. வீட்டின் சாய்வான கூரை யிலே வெட்டிப் பதித்ததுபோல ஒரு நீள்சதுர,

## கல்வியும் கல்லூரியும்

**"கல்லூரிகளை ஏன் அறிவுக் களஞ்சியம் என்று அழைக்கின்றோம். தெரியுமா?" என்று கேள்வி கேட்டார் அறிஞர் ஒருவர்.**

**யாரும் பதில் தரவில்லை.**


**உடனே அந்த அறிஞர் "கல்லூரியில் சேரும் மாண வர்கள் ஓரளவு அறிவுடன் வருகிறார்கள். கல்லூரியை விட்டுச் செல்கிறவர்கள் எதையுமே எடுத்துச் செல்வ தில்லை. எல்லா அறிவும் அங்கேயே தங்கிவிடுகிறது. அதனால்தான்" என்று பதில் தந்தார்.**

கண்ணாடிச் சாய்சன்னல், அதன் கீழ், ஒரு சிறிய மேசையும் கதிரையும். இவற்றைத் தவிர அந்தச் சிறு அறையில் குறிப்பிடக்கூடிய பொருட்கள் வேறு இல்லை.

தங்கராசருக்கு. அந்தச் சின்ன கம்பியில்லாத கண்ணாடி ஜன்னல்தான் அவரது பார்வையையும், எண்ணங்களையும் வெளிச்செலுத்துவதற்கு ஒரு வாயிலாக இருந்தது. அது சாய்வாக இருந்ததனால் எதிர்ச்சாரியில் உள்ள வீடுகளின் கூரைகூட அதனூடாகத் தெரியாது. கதிரைமீது ஏறிநின்றால் மட்டுமே அக் கூரைகளின் மேற்பகுதி தெரியும்.

ஆனால் எப்போதுமே ஆகாயம் தெரியும். நித்திரை வராமல் தவிக்கும் நீண்ட இரவுகளில், கிளிநொச்சி வயலும் அதன் காவற்குடிலும் தெரியும், மனைவி பாக்கியத்தையும் அவர் அந்த சின்ன ஆகாயத்துண்டில், அந்த நேரங்களில் தேடுவதுண்டு. அவளைக் காணமுடிவதில்லை. ஆகாயத்துக்கும் அப்பால் போய்விட்டவள் எப்படி இங்கு வருவாள்..... அதுவும், நான் டென்மார்க்குக்கு வந்த விஷயம் அவளுக்குத் தெரியுமோ என்னவோ என எண்ணிக் கொண்டே படுத்திருப்பார்.

இப்போதும், படுக்கையில் வசதியாகப் படுத்துக் கொண்டு, கைகளைத் தலைக்குப் பின்னால் மடித்து வைத்தவாறே அக்கிளிகளையும், சாய் சன்னலூடாகத் தெரிந்த வானத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார்.



அப்போதுதான், அந்தச் சாய்சன்னலின் வெளிவிளிம்பில் இரண்டு கருக்குருவிகள் பறந்துவந்து அமர்ந்தன. டென்மார்க் கருக்குருவிகளை ஒருநாளுமே இவ்வளவு அண்மையில் கண்டதில்லை. அவற்றின் கறுப்பு இறகுகள் படுகறுப்பு என்றுதான் அவர் நினைத்திருந்தார். ஆனால் இப்போது, காலை வெய்யிலில் அவற்றின் முதுகின்மீதும், வாலின்மீதும், மயிலிறகில் காணப்படும் கருநீலமும், கரும்பச்சையும் பளிச்சிடுவதைக் கண்டு அவர் குழந்தைபோலச் சிரித்துக் கொண்டார். உள்ளம் முழுவதுமே சந்தோஷம் நிறைந்திருப்பதை உணர்ந்தார். பாக்கியம் இறந்தபிறகு இன்றுதான் அவர் மறுபடியும் அப்படியொரு மனநிலையை அனுபவித்தார்.

அந்த இன்பத்தில் அவர் தன்னை மறந்திருந்த போது, அந்தக் கருக்குருவிகள் இரண்டும் ஜிவ்வென்று மேலெழுந்து, வானில் வட்டமிட்டு, மீண்டும் தாழப்பறந்து வந்து, சாய்சன்னல் விளிம்பில் உட்காந்து சிறகுகளைக் கோதிவிட்டுக் கொண்டன.

எத்தனை சந்தோஷமாக அப் பறவைகள் இரண்டும் பறந்து சுகிக்கின்றன! சிறகுகள் இருப்பதே பறப்பதற்கல்லவா! விரும்பும் திசையெல்லாம் விண்ணின்று பறந்து மகிழமுடியாது விட்டால் பின் என்ன மண்ணாங்கட்டிக்கு வாழ்க்கை! என்று எண்ணிய தங்கராசரின் பார்வை, கூண்டுக்கிளிகளில் பதிந்தது.

மறுகணம், அவருக்கு எண்ணம் பிறந்தது. அந்த எண்ணத்தை உடனே செயலாக்கவேண்டுமென ஒரு உத்வேகமும் கூடவே எழவே, வாயில் ஒரு குறும்புச் சிரிப்புடன் படுக்கையிலிருந்து எழுந்தார் தங்கராசர். துடிப்பு மிக்கவராய் கதிரையில் ஏறிநின்று முதலில் சாய்சன்னலின் கொழுக்கிகளைக் கழற்றி, அதனை முடியுமான அளவிற்கு உயர்த்தித் திறந்து வைத்தார். பின் கீழே இறங்கி, கிளிக்கூண்டின் கதவைத் திறந்து வைத்தார்.

கூண்டில் அவரது கை பட்டதுமே கிளிகள் இரண்டும் கத்திச் சிறகடித்து, ஏதோவெரு மூலையில் ஒளிய முயற்சித்தன. கையைக் கூண்டுக்குள் உள்ளே நுழைத்து முதலில் இஸபெல்லாவைப் பிடித்து, கையைச் சன்னலருகே கொண்டுபோய்க் கைப்பிடியைத் தளர்த்தினார். சடசடவெனச் சிறகடித்த இஸபெல்லா சன்னலுக்கு வெளியே பறக்கவில்லை! அது பறந்து அந்த அறையினுள் இருந்த அலுமாரியின் மேல் அமர்ந்துகொண்டு மலங்க மலங்க விழித்தது. இதற்குள் லாஸ் உயிரே போவதுபோல் கீச்சிட்டவாறே கூண்டுக்குள் சூறாவளிபோல் சுழன்றடித்துக்கொண்டிருந்தது. மீண்டும் கையைக் கூண்டினுள் நுழைத்து ஒருவாறாக அதைத் தங்கராசர் பிடித்த போது அது ஆவேசங்கொண்டு அவருடைய கையை மூர்க்கமாகக் கொத்தியது. அதைப் பொருட்படுத்தாது, லாசை வெளியே எடுத்து, கதிரையில் ஏறி நின்றுகொண்டு, சன்னலின் வெளியே கையைப் புகுத்தி கிளியை விடுவித்தார். அவருடைய கையை விட்டு விக்கெனப் பறந்த லாஸ், கண்மூடி முழிப்பதற்குள் மறுபடியும் சன்னலினூடாக அறையினுள் நுழைந்துவிட்டது.

இதைக் கண்ட தங்கராசர் அதிசயித்துப்போனார். வெளியில்விட்ட கிளி ஏன் உள்ளே வந்தது?.... ஓகோ!.... அதன் சோடி இஸபெல்லா அறையினுள் அல்லவா இப்போது இருக்கின்றது! அதைவிட்டுப் போவதற்கு அதன் துணைக்கென்ன விசரா என எண்ணிக்கொண்டு கீழே இறங்கினார் தங்கராசர்.

இறங்கி நின்று பார்த்தபோது, அலுமாரியின்மேல் அடைக்கலந்தேடிக்கொண்ட கிளிகள் அவருக்குத் தெரியவில்லை. அவை அவலமாகக் கத்திக் கீச்சிடுவது மட்டுமே கேட்டது.

## அளவு கடந்த ஆர்வம்

விஞ்ஞானி எடிசன் தனது ஆய்வு கூடத்திலேயே காலத்தைக் கழிப்பது வழக்கம். இதனைக்கண்ட மனைவி "24 மணித்தியாலமும் உங்கள் வேலையிலேயே மூழ்கி இருக்கிறீர்கள் ஒரு நாளாவது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" எனக் கடிந்து கொண்டாள். ஓய்வு எடுத்தால் நான் எங்கே போகலாம்? எனக் கேட்ட எடிசனுக்கு நீங்கள் விரும்பிய இடத்திற்குப் போகலாம் என்றாள் மனைவி. "நான் அங்கேயே போகிறேன்" எனக்கூறி மீண்டும் ஆய்வுகூடத்திற்குள்ளேயே புகுந்து கொண்டார் எடிசன்.

எப்படியாவது அவை இரண்டையும் அங்கிருந்து விரட்டி, சன்னலினூடாக வெளியேற்றி விடவேண்டுமென்ற ஒரு அவசரத்துடனும், தவிப்புடனும் தங்கராசர் கதிரை மீது ஏறி அலுமாரிமேல் பார்வையைச் செலுத்தினார்.

லாஸும், இஸபெல்லாவும் அவருடைய வழுக்கைத் தலையைக் கண்டதுமே பறந்தடித்துக் கொண்டு சுவருடன் ஒதுங்கி, தங்கள் மொழியில் அவரைத் தாறுமாறாகத் திட்டின. தங்கராசர் தன் முயற்சியைக் கைவிடவில்லை. கதிரையை அலுமாரிக் கருகில் இழுத்து நிறுத்தி அதில் ஏறிநின்று, தன் கரங்கள் இரண்டையும் மேலே உயர்த்திக் கிளிகளைப் பிடிக்க முயன்றபோதுதான் அவர் சமநிலை குலைந்து சரிய நேரிட்டது. கதிரையின் விளிம்பிலிருந்து அவரது இடதுபாதம் சறுக்கியது. திடீரென ஏற்பட்ட அச் சறுக்கல் காரணமாக அவருடைய கைகள் பிடிமானம் தேடிக் காற்றைத் துழாவின. இந்த முயற்சியில் அவர், உடல் ஒருபக்கமாகத் திரும்பிய நிலையில், கீழேயிருந்த கட்டிற் சட்டத்தில் பிடரி பலமாக மோதும் வகையில் விழுந்துவிட்டார்.

தடால் எனப் பிடரியில் விழுந்த அடியில் துடித்துப்போன் தங்கராசர் கட்டிலின் பக்கத்திலே தரையில் துவண்டுபோய்க் கிடந்தார்.

அப்போது, அந்தச் சின்ன சன்னலினூடாகத் தெரிந்த நிர்மலமான நீலவானத்துண்டில், மனைவி பாக்கியத்தின் சிரித்த முகம் தெரிவதுபோலவும், அவள் 'வாருங்கோ வீட்டை போவம்!' என அன்புடன் அழைப்பது போன்றும் தங்கராசருக்குத் தெரிந்தது.

எல்லாச் சந்தடியும் அடங்கிய பின்னர், லாஸும் இஸபெல்லாவும் அலுமாரியிலிருந்து தாமாகக் கீழே வந்து, தமது கூண்டுக்குள் நுழைந்து, அமைதியாய் அமர்ந்துகொண்டன.

அக்கூண்டின் கதவும், சாய்சன்னலும் திறந்தே கிடந்தன.

பாலமனோகரன்

# விடுதலை கேட்டு அலறும் மரங்கள்

நமது வீடுகளுக்கு வருபவர்கள் மரங்களைத் தறிப்பவர்களாக இருந்தால் அப்படிப்பட்டவர்களைக் கண்டு மரங்கள் பயந்து நடுங்குகின்றன என்பது ஏற்கனவே வெளியாகிவிட்ட செய்தி. தற்பொழுது ஜேர்மனியில் உள்ள பல்கலைக்கழகமொன்று மேற்கொண்ட ஆய்வுகளின்படி மரங்களை நேசிக்கவும்; அவர்களுடன் பேசவும் முடியுமென்று கூறுகிறது. மேலும் சுதந்திரம் பறிக்கப்பட்டால் அவை அலறவும் செய்கின்றனவாம்.



புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள லேசர்கருவி மூலம் தாவரங்களின் தகவல் ஒலிகளை அளந்தெடுக்கிறார்கள். தாவரங்கள் இலைகளின் மூலம் காற்று வடிவிலான கோமோன்களை வெளிவிடுகின்றன. இவற்றை மிக நுட்பமான லேசர் கருவியில் அளவெடுத்து ஒலியாக மாற்றிய போது சாடிகளில் வைக்கப்பட்டிருக்கும் சிறு மரங்கள் உதவி கேட்டு அலறுவதைக் கேட்க முடிந்ததாக இந்த ஆய்வுகள் கூறுகின்றன.


இதே தொட்டிச் செடிகளைப் போல தமது சொந்த நாடான தோட்டங்களிலிருந்து பிடுங்கப்பட்டு, புலம் பெயர் நாடுகளில் தொட்டிச் செடிகளைப் போல வாழும் தமிழ் மக்களின் இதய ஓலமும் அமையுமா? ஒரு செக்கனுக்கு இரண்டாயிரம் தடவைகள் மோதி இலைகளை அளவெடுக்கும் இந்த லேசர்கருவியைத்தான் பாவித்துப் பார்க்கவேண்டும்.

# செயற்கை முத்து

முத்தானது, இயற்கையில் கடலில் உள்ள சிப்பிகளில், சிலவற்றிலிருந்து கிடைக்கிறது என்ற விபரம் நமக்குத்தெரியும். இது முத்து வாங்குவோர் அனைவரின் தேவையையும் பூர்த்தி செய்யாது. ஆகவே ஜப்பானைச் சேர்ந்த "மிக்கி மோடா" என்பவர், ஒரு புதிய முறையை உருவாக்கினார். அதன்படி உயிருள்ள சிப்பிகளை வளர்த்து, அதை லேசாகத் திறந்து ஒரு சிறிய பொருளைப் போட்டு மீண்டும் தண்ணீரில் விட்டு விடுவது. ஒரு குறிப்பிட்ட காலம் கழித்தபின் அதை உடைத்துப் பார்த்தால் அதனுள் முத்துக் கிடைக்கும். இப்படி உருவாவது "கல்சர்டு பியர்ல்" எனப்படும். இந்த வகையில், நாம் உண்டாக்கும் முத்தில் எந்த வகை வடிவம் தேவைப்படுகிறதோ அந்த வடிவப் பொருளை உள்ளே செலுத்தினால் அதே வடிவ முத்தைப் பெற்றுவிடலாம்.

திரைப்பட உலகை அதிரவைக்கும்

# TITANIC
# டைற்றானிக்







உலகின் அதிகூடிய வசூல் படங்களை எடுத்தவர் ஸ்ரீபன் ஸ்பீல்பேர்க். இதுவரை இவரது படங்கள் 217 கோடி டொலர்களை சம்பாதித்துக் கொடுத்துள்ளன. இவரது யூரோசிக்பாக் திரையிடப்பட்ட போது அமெரிக்காவில் மட்டும் 2404 திரையரங்குகளில் ஓடப்பட்டது. ஒரு நாளைய வருமானம் 18 மில்லியன் டொலர்களாகும்.

தற்போது யூரோசிக்பாக் ஏற்படுத்திய வசூலின் தாக்கத்தையும் தாண்டி, டைற்றானிக் என்னும் ஆங்கிலத் திரைப்படம் திரையரங்குகளில் சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு 14 ஆஸ்கார் விருதுகளுக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ள இப்படம் முக்கியமான பரிசுகளை வெற்றி கொள்ளுமென











எதிர்பார்க்கப்படுகிறது.


2228 பயணிகளுடன் புறப்பட்ட டைற்றானிக் 1912 சித்திரை 14-ம் திகதி இரவு பனிப்பாறையுடன் மோதி மூழ்கியது. 1523 பேர் மரணமடைந்தார்கள். இந்தக்கோரச் சம்பவத்தை இன்றைய நவீன தொழில்நுட்பச் சாதனங்களின் உதவியுடன் படமாக்கி ரசிகர்களைத் திகைப்படைய வைக்கிறார்கள். டைற்றானிக் பிரமைக்குள் மூழ்கி கண்ணீர் விடும் ஐரோப்பிய ரசிகர்களை சகல திரையரங்களிலுமே காணமுடிகிறது.



தாழ்ந்து போன டைற்றானிக் கப்பலில் வைரத்தைத் தேடிச் சென்ற குழுவால் மீட்கப்பட்ட ஓர் அழகியின் ஓவியத்திலிருந்து கதை ஆரம்பமாகிறது. டைற்றானிக்கில் பயணம் செய்தவர்களில் தற்போது 12 பேர் மட்டுமே உயிருடனிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் இந்த அழகி. இவர் இப்போது வயோதிப மாதாக இருக்கிறார். அவர் நேரடியாகக் கதை கூறிச் செல்ல; பிரமைகளுடன் காட்சி விரிவடைகிறது. 1912-ம் ஆண்டின் துறைமுகம் கண்களில் தரிசனமாக பிரமாண்டமான ரிற்றானிக் கம்பீரமாக எழுந்து நிற்கிறது.

டைற்றானிக் எப்படியிருக்குமோ அதேயளவில் கப்பலை உருவாக்கியிருக்கிறார்கள். கப்பலின் பிரதான மண்டபத்தில் விரிக்கப்பட்டிருக்கும் நிலவிரிப்புக்கூட அப்படியே உருவாக்கப்பட்டிருக்கிறது. முன்னர் ஜேர்மனியிலுள்ள நிறுவனமே இந்த நிலவிரிப்பை வடிவமைத்தது; இப்







பொழுது அதே நிறுவனத்துடன் தொடர்புகொண்டு, அதே வர்ணத்தில் இந்த விரிப்பைச் செய்து விரித்திருக்கிறார்கள். இப்படியே பல காரியங்கள். போட்ட முதலீடு பாதியிலேயே முடிவடைந்து செலவு பலமடங்காக அதிகரித்தது. இனி திரைப்படத்தை நிறுத்திவிடுவதே நலமென ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் இயக்குனரான ஜேம்ஸ்கமரூன் தான் கொல்லப்பட்டால் மட்டுமே படம் நிறுத்தப்படுமென உறுதியாகக் கூறிவிட்டார். தற்போது எல்லா ஆருடங்களையும் தகர்த்தெறிந்தபடி முன்வந்திருக்கிறது டைற்றானிக்.

லியனாடோ டிக்காப்ரியோ, கேற்வின்ஸ்லெற் இளம் ஜோடியின் காதல் காட்சிகளும், ஜேம்ஸ் கோணரின் இசையும் ஆர்ப்பாட்டமாக உள்ளன. ஒவ்வொரு காட்சியும் மாற்றமடையும் போது வேறுபாடான இசையதிர்வுகள் தோன்றி கவனத்தைக் காட்சிக்குள் இழுத்துச் செல்கிறது. கப்பல் உடைந்து கடல்நீர் உட்புகும் போது காதின் அண்மையில் வெள்ளம் பாய்வதுபோல ஒலி, நமது கால்களும் நனைவதுபோல சிறுவெள்ள ஓசைகளின் சலசலப்பு வேறு. தலை குத்தி மூழ்கும் கப்பல் நடுவழியில் இரண்டாக முறிகிறது. அப்பொழுது வழுக்கி விழுவோர் அனைவருமே, "ஸ்டண்ட்" நடிகர்கள் தான்.

டைற்றானிக் கப்பல் தாழ்ந்து போன கதை ஒரு தளத்திலும் அங்கே நடைபெறும் அமரத்துவமான காதல் கதை, மனதைத் தொடும்படியாக இன்னொரு தளத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. மூழ்கப்போகும் கப்பல்; அதில் தள்ளாடும் ஜாக், ரோஸ் இளம் ஜோடியின் காதல், துப்பாக்கியுடன் காதலுக்குத் தடை போடும் வில்லன் என்று விறுவிறுப்பு ஒன்றன்மேல் ஒன்றாக வளர்த்துச் செல்லப்படுகிறது. மூன்றுமணி பதினான்கு நிமிடங்







## 1912-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி




பிற்பகல் 11.40-11.50
கப்பலின் ஒரு பகுதி
பனிப்பாறையில் மோதுகிறது 10
நிமிடங்களின் பின் 6
அறைகளில் கடல் நீர் உட்
செல்லுகிறது.



அதிகாலை 12.30- 2.05
கப்பலின் முன்பகுதி
நீரினுள் மூழ்குகின்றது.



கப்பலின் பெரும் பகுதி
நீரினுள் மூழ்குகின்றது.




அதிகாலை 2.20 கப்பல்
இரண்டாக உடைகிறது.
முன் பகுதி விரைவாக
நீரினுள் மூழ்குகிறது



கள் கொண்ட திரைப்படமானாலும் மூன்றுநிமிடம் போல பொழுது கரைந்து விடுவதாகக் கூறுகின்றார்கள் ரசிகர்கள்.

கடைசியாக மனதையொன்று இடிக்கிறது. சிறு படகுகளில் உயிர்




தப்பும்போது 1178 பேருக்கு மட்டுமே பாதுகாப்புப் படகுகளில் இடமுண்டு. மற்றவர்கள் என்ன செய்வது? அதற்காக மூன்றாம் வகுப்பில் பயணம் செய்த ஏழைப் பயணிகள் துப்பாக்கி முனையில் அடைத்துவைக்கப்படுகிறார்கள். வசதியுள்ளவர்கள் , பெண்கள், பிள்ளைகளுக்கே முதலிடம். தாழ்ந்து போகும் நேரத்திலும் பலியாகிப்போவது மூன்றாம் வகுப்புப் பயணிகளே என்பது மனதைக்குடைந்து செல்கிறது.

()

TITANIC TITANIC TITANIC TITANIC TITANIC TITANIC TITANIC TITANIC TITANIC

## மீண்டும் பிரதமரானார்

டென்மார்க் பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் சோசலிச ஜனநாயகக் கட்சி மிகச் சிறிய பெரும்பான்மையுடன் வெற்றி



பெற்றுள்ளது. பிரதமராகக்கூடிய இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டிருக்கிறார் இடது சாரிக் கட்சியைச் சேர்ந்த திரு. உபை எலமன் ஜென்சன்.

வெளிநாட்டவருக்கு எதிரான கோஷத்தை பிரதான விடயமாக முன்வைத்து இத் தேர்தலில் சில கட்சிகள் போட்டியிட்டன. அகதிகளுக்கு எதிராக தீவிரமாகக் குரல் கொடுத்த கட்சிகள் கணிசமான ஆசனங்களைப் பெற்றாலும் ஆட்சியமைக்கும் அதிகாரத்தை டெனிஸ் மக்கள் அவர்கள் கைகளில் ஒப்படைக்கவில்லை. டென்மார்க் பிரதமர் திரு.போல் நியூருப் ராஸ்முசன் மீண்டும் பிரதமரானார்.

## யானை



யானையின் துதிக்கையில் நாற்பதினாயிரம் தசைகள் உண்டு. பருமனான ஒரு மரத்தை வேருடன் பிடுங்கக் கூடிய அளவு யானையின் துதிக்கை பலம் உண்டு. அது போலவே மெல்லிய புல்லையும் மென்மையாகப் பறிக்கக்கூடிய திறமும் உண்டு.


# INTERNATIONAL REFUGEES ORGANISATION

1083 Garratt Lane, First Floor, London SW17 0LN.



# பாரிஸ் நகரில் சிறந்த உணவகம்

# Woodlands Restaurant

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விஷேட உணவு வகைகள்

**Woodlands Restaurant**

லாச்சப்பலிலுள்ள வர்த்தக
ஸ்தாபனத்தினருக்கு குறிப்பிட்ட
இடத்தில்
15 நிமிடங்களில் வழங்கப்படும்.

சமறி ஒரு மாதம்
ஒரு நேரம்
600 பிராங்குகள்.

சமறி ஒரு மாதம்
இருநேரம் 1100
பிராங்குகள்.

தொடர்புகளுக்கு
01 40 37 08 20
பதிவுக்கு
*207,* Rue De fg St. Denis.
75010 PARIS. M° LACHAPELLE






# நாடும் மக்களும்

# நோர்வே

பரப்பளவு – 306.830 ச.கி.மீ
சனத்தொகை – 4.4 மில்லியன்
தலைநகரம் – ஒஸ்லோ
மொழி – நொர்ஸ்க் (Norsk)
மதம் – புரட்டஸ்தாந்து
நாணயம் – குரோணர்
பெரிய நகரங்கள் – பேகன், துறனெய்ம், ஸ்ரவங்கர்

நோர்வே ஐரோப்பாவின் வரைபடத்தில் மேல் மூலையிலுள்ளது. பெரிய மலைகளை அதிகமாகக் கொண்ட நோர்வேயின் அண்டை நாடுகளாக சுவீடன், பின்லாந்து, ரஷ்யா, ஆகியவை உள்ளன. இந்த நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களாக மீனும் எண்ணெயும் உள்ளன. பாராளுமன்ற ஆட்சிமுறை இருந்தாலும் நோர்வே அரசரிடம் சகல முடிவுகளும் தெரிவிக்கப்பட்ட பின்பே அமுல்நடத்தப்படுகின்றன. கோடை காலத்தில் நோர்வேயின் வடக்கில் சூரிய வெளிச்சம் 24 மணிநேரமும் காணப்படும் அதேவேளை குளிர்காலத்தில் சூரியனைக் காண்பது அரிதாகவே உள்ளது.




ஒஸ்லோவில் அமைந்துள்ள Vigelandsparken


http://www.thamizham.net

# V & A
## TRAVEL SERVICES

- For Your world wide travel We arrange low price Travel Tickets
- For Sathia Saibaba Temple Tours & South Indian Temple Tours
- We arrange competitive Travel Insurance

**YOU HAVE TRIED THE REST! NOW TRY THE BEST!!**

# V & A
## HOUSING & FINANCIAL SERVICES

**HOME OWNERS:**

* We have Professionals & other tenants waiting to move in
* You rent will be guaranteed
* We urgently need houses, flats and rooms in Tooting, Wimbledon, Colliers Wood, Walthamstow & East Ham

Also

**PROPERTIES MAINTENANCE WORKS UNDERTAKEN**

**CONTACT**

140 Hoe Street
Walthamstow, London E17 QR
Tel: 0181 - 509 989 / 0181 509 0509
Fax: 0181 509 2812

175 Tooting High Street
London SW17 0SZ.
Tel: 0181 767 8090 / 0181 767 7060
Fax: 0181 767 9020

# GNANAM

# ஞானம் சென்றர்

| | | |
|---|---|---|
| இந்தியா | 30 | நிமிடம் |
| கனடா | 80 | நிமிடம் |
| தாய்லாந்து | 23 | நிமிடம் |
| ஹொங்கொங் | 45 | நிமிடம் |
| பிரான்ஸ் | 135 | நிமிடம் |
| இலங்கை | 30 | நிமிடம் |
| சுவிஸ் | 70 | நிமிடம் |
| மொறிசியஸ் | 28 | நிமிடம் |
| சிங்கப்பூர் | 45 | நிமிடம் |
| பிரித்தானியா | 100 | நிமிடம் |
| அமெரிக்கா | 100 | நிமிடம் |
| ஜேர்மனி | 75 | நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 | நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 52 | நிமிடம் |
| அல்ஜீரியா | 50 | நிமிடம் |
| [illegible] | 50 | நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்[illegible]லைபேசி) | 80 | நிமிடம் |

சர்வதேசத் தொடர்புகளுக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகிறோம்

TELECOM CENTERS

இலங்கைக்கான தொடர்பு நேரம் 30 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது




தொடர்புகளுக்கு

புயேயுஆ Telecom Center

**195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France. Tel: 01 46 07 09 36 Fax: 01 46 07 00 44**

**M°: Lachapelle / Gare du Nord**

பாரிஸ் 10–ல்
83, Rue du Fg. Saint Denis.
75010 Paris.
M°: Chateau d' eau

பாரிஸ் 11–ல்
175, Rue de St. Maur.
75011 Paris.
Tel: 01 43 38 22 98
M°: Belleville

பாரிஸ் 18–ல்
13, Rue de Suez.
75018 Paris.
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
M°: Chateau Rouge

பாரிஸ் 20–ல்
38, Rue de Belleville.
75020 Paris.
Tel: 01 40 33 36 72
M°: Concourt

GNANAM Telecom Center

**வெகுவிரைவில் சுவிஸ், லண்டனில் எமது சேவை ஆரம்பமாகின்றது**

குறிப்பிட்ட சில நாடுகளுக்கு மட்டும்